RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
"Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 03 நவம்பர 2023 இதழ்:- 25

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## வடக்கு கிழக்கில் இந்து முஸ்லிம் ஆலயங்களை அபகரிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் உடந்தை என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு தெரிவிப்பு!

தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேசங்களிலுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்கத் தலங்களைக் கைப்பற்றுவதற்கு வசதி ஏற்படுத்துகின்றது என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (3ம் பக்கம் பார்க்க)




BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Manulife

## தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்த சிங்கள சட்டத்தரணிக்கு உயிர் அச்சுறுத்தல்!




மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக சிறிலங்கா குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தமிழர்களின் பிரச்சனைகளுக்காக குரல் கொடுக்கும் சிங்கள சட்டத்தரணி தனுக்க ரணன்ஞக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிறிலங்கா காவல்துறை தலைமையகத்தில் தாம் முறைப்பாடொன்றை மேற்கொண்டதாக அவர் (6ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## இலங்கையில் வன்முறைகள் மீண்டும் ஏற்படும் ஆபத்து ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் சம்பந்தர் எடுத்துரைப்பு!

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

சமகாலத்தில் இலங்கையை பௌத்த சிங்கள நாடாக மற்றும் பிரகடனப்படுத் துவதற்கான கடும்போக்கு ஆக்கிரப்பு நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக உள்நாட்டில் மீண்டும் வன்முறைகள் ஏற்படுவதற்கான ஆபத்தான நிலைமைகள் உள்ளதென ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற (4ம் பக்கம் பார்க்க)



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!



## Piravien Siva

B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com

**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$279,000**

Bachelor/Studio: 1 Washrooms: 1

Condo Steps To The University

### Eglinton / Mccowan



**Scarborough** **$499,900**

Bedrooms: 2 Washrooms: 2

Convenience living on Eglinton line

### Warden Ave / Enterprise Blvd




**Markham** **$749,000**

Bedrooms: 1+1 Washrooms: 2

Direct Access to Hwy 7 & 407

### Dundas/Hurontario St




**Mississauga** **$599,000**

Bedrooms: 3 Washrooms: 2

High Demand Layout Within Building

### Warden/Steeles



**Scarborough** **$760,000**

Bedrooms: 2+1 Washrooms: 2

Over 1900 Sqft Of Living Space

### Main St. E & Russell St.



**Southgate** **$799,999**

Bedrooms: 4 Washrooms: 3

Detached Home W/3063 Sq Ft

### Kennedy Rd & Bovaild Dr. E



**Brampton** **$1,100,000**

Bedrooms: 3 Washrooms: 3

recently renovated, sep. entrances

### Eglinton Ave & Danforth Rd



**Toronto** **$1,150,000**

Bedrooms: 4 Washrooms: 4

Low Maintenance Fees.

### Fletcherscreek Blvd/Bovaird Dr



**Brampton** **$3,500**

Bedrooms: 3 Washrooms: 4

Lots Of Upgrades!

### Markham Rd & Lawrence Ave

FOR LEASE




**Scarborough** **$2,000**

Basement for lease

Close To TTC, Shopping & 401.

### Meadowvale / Sheppard

FOR LEASE



**Scarborough** **[illegible]**

Bedrooms: 1 Washrooms: 1

Great neighbourhood

### 9th Line/14th Ave



**Markham** **$1,689,000**

Bedrooms: 4+1 Washrooms: 4

Newly renovated luxury home

*Looking for more house?*

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# வடக்கு கிழக்கில் இந்து முஸ்லீம் ஆலயங்களை அபகரிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் உடந்தை என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு தெரிவிப்பு!




தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேசங்களிலுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்கத் தலங்களைக் கைப்பற்றுவதற்கு வசதி ஏற்படுத்துகின்றது என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை நாட்டில் வாழும் சிறுபான்மையின இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கான மீயுயர் மத சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் அரசாங்கமானது தற்போது நடைமுறையிலுள்ள ‘ஒடுக்குமுறை’ கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த ஆணையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஸ்டீஃபன் ஸ்னெக் மற்றும் டேவிட் கெரி ஆகியோர் கடந்த மாதம் (ஒக்டோபர்) இலங்கைக்கு சென்றிருந்திருந்ததுடன் கொழும்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு மத சுதந்திரம் தொடர்பில் நிலவும் கரிசனைகள் பற்றி ஆராய்ந்தனர். அது மாத்திரமன்றி சர்வ மதத்தலைவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களையும் முன்னெடுத்திருந்தனர்.

அதன்படி, இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஆணையாளர் ஸ்டீஃபன் ஸ்னெக், ‘இலங்கையில் நிலவும் மத சுதந்திரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் நாட்டின் அரசாங்க அதிகாரிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்துக் கலந்துரையாட முடிந்தமையினையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்’ என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்வேறு மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்கள் ஒன்றிணைந்து கீழ்மட்டத்திலிருந்து பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தாலும் கூட, நாட்டில் வாழும் சிறுபான்மையின இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கான மீயுயர் மத சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் அரசாங்கமானது தற்போது நடைமுறையிலுள்ள(22ம் பக்கம் பார்க்க)

# அகதிகள் முகாம் மீதான தாக்குதல் போர்க்குற்றம் - ஐ.நா
## ஹமாஸ் -இஸ்ரேல் போரில் இடைநிறுத்தம் தேவை - ஜோ.பைடன்

இஸ்ரேல் இராணுவம் காசாவில் சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. சமீபத்தில் இஸ்ரேல் இராணுவம் ஜபாலியா அகதிகள் முகாம் மீது நடத்திய தாக்குதலில் 50-க்கும் அதிகமானோர் பலியாகினர். காசாவின் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு எகிப்து, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அகதிகள் முகாம் மீதான தாக்குதல் போர்க்குற்றத்துக்கு சமமானது என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா. சபையின் மனித உரிமைகள் அமைப்பு தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்தது மற்றும் அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவையும் கருத்திற்க் கொண்டு அவை போர்க்குற்றங்களுக்கு சமமான தாக்குதல்கள் என்று நாங்கள் கருதுகிறோம் என பதிவிட்டுள்ளது.




இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மினியாபோலிஸ் நகரில் பிரசார உரை நிகழ்த்தி கொண்டிருந்தார். அப்போது இஸ்ரேல் தாக்குதலால் பாலஸ்தீன மக்கள் பாதிக்கப் படுவதற்கு எதிராக, பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நெருக்கடிக்கு உள்ளான ஜோ பைடன் ஹமாஸ் - இஸ்ரேல் இடையே போர் இடைநிறுத்தம் தேவை என தெரிவித்துள்ளார். இது பிணைக்கைதிகளை மீட்க உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தாக்குதலை தொடர்ந்து, இஸ்ரேல் கண்மூடித்தனமான வகையில் காசாவில் தாக்குதல் நடத்தி வருகிறது. வான்வழி, கடல்வழியாக தாக்குதல் நடத்தி வந்த நிலையில், பொதுமக்கள் வசிக்கும் கட்டடங்கள், மருத்துவமனைகள், முகாம்களும் தாக்குதலுக்கு உள்ளாகிறது. இதனால் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் காசா மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள்.

மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க போதுமான வசதிகள் இல்லாததால் காயம் அடைந்தவர்கள் சிகிச்சையின்றி பரிதவிக்கிறார்கள்.

இதனால், உலகம் முழுவதும் இருந்து இஸ்ரேல் தாக்குதலை நிறுத்த வேண்டும் என பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இருந்த போதிலும் இஸ்ரேல் தாக்குதலை குறைக்கவில்லை. இந்த நிலையில் தான், பைடன் இவ் வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் வலியுறுத்துவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கையில் வன்முறைகள் மீண்டும் ஏற்படும் ஆபத்து

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் சம்பந்தர் எடுத்துரைப்பு!

சமகாலத்தில் இலங்கையை பௌத்த சிங்கள நாடாக மற்றும் பிரகடனப்படுத்துவதற்கான கடும்போக்கு ஆக்கிரப்பு நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக உள்நாட்டில் மீண்டும் வன்முறைகள் ஏற்படுவதற்கான ஆபத்தான நிலைமைகள் உள்ளதென ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிக் குழுவினருடன் கடந்த 31 ஒக் 2023 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவினருடன் முக்கியமானதொரு சந்திப்பில் பங்குபற்றியிருந்தேன். அந்தச் சந்திப்பின் போது சமகால நிலைமைகள் சம்பந்தமாக பல்வேறு முக்கிய விடயங்களை அவர்களுக்கு எடுத்துரைத்திருந்தேன்.

குறிப்பாக, இலங்கை அரசாங்கம், திட்டமிட்ட வகையில் நாட்டை பௌத்த, சிங்கள நாடாக பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்காக, பௌத்த தேரர்கள் மற்றும் இதர அரசாங்க கட்டமைப்புக்களைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

விசேடமாக, காணிகளை அபகரித்தல், பௌத்த அடையாளங்களை மையப்படுத்தி ஆக்கிரமித்தல் உள்ளிட்ட பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



இதன் காரணமாக இனங்களுக்கு இடையில் பல்வேறு குழப்பகரமான நிலைமைகள் தோன்றுவதோடு இன முறுகல்கள் அதிகரித்துச் செல்வதற்கான சூழல்களே நீடிக்கின்றது.

அதே நேரம் உள்நாட்டில் தொடர்ச்சியாக இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்குதல்ரூபவ் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படும் முயற்சிகள் ஆகியவற்றில் பிற்போக்கான நிலைமைகள் காணப்படுவதன் காரணமாக, வடக்கு, கிழக்கினை பூர்வீகமாகக் கொண்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலைமைகளானது, தமிழ் மக்களை வலிந்து ஏதிலிகளாக்கும் செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிமக்கள் ஆவர்.

அவர்கள் சுயநிர்ணய உரிமை உரித்துடையவர்கள். அவர்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடியவாறான அதிகாரங்களைப் பகிரவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அரசாங்கம் இனங்களுக்கு இடையிலான தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வமில்லாத நிலையில் உள்ளதோடுரூபவ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் இழுத்தடிப்புக்களைச் செய்கின்றது.

மேலும், பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும், அரசாங்கம் திருப்திகரமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. ஆகவே, இவ்வாறான சூழல்கள் தொடருகின்ற பட்சத்தில் மீண்டும் நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்கான ஆபத்தான நிலைமைகளே நீடிக்கின்றன.

எனவே அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உரிய அழுத்தங்களை பிரயோகிப்பதோடு, நீண்டகாலம் நீடித்து வருகின்ற இனங்களுக்கு இடையிலான தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வினை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றிய சமூகத்தினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனான ஒத்துழைப்புக்களையும் உரிய அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும். அவ்வாறு அரசாங்கம் முற்போக்கான செயற்பாடுகளை நடைமுறையில் பின்பற்றுகின்ற போது தான்,பொருளாதார ரீதியிலும் மேம்பட்ட சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்றார்.

இது இவ்றிருக்க கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் பங்கேற்கும் சகல தரப்பினரும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கடன் வழங்குநர்கள் அனைவரும் சமமாகவும் நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என அமெரிக்க தூதுவர் மத்திய வங்கி ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனூடாக, கடன் மறுசீரமைப்பு செயன்முறையை நியாயமான முறையில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா - அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!
எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழர்களிடம் பொதுமன்னிப்புக் கோரிய அம்பிட்டிய சுமனரத்ன தேரர்

தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் என பொது வெளியில் எச்சரிக்கை விடுத்திருந்த மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர் தனது கருத்துக்கு பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.

தான் மிகுந்த மன வேதனையில் இருந்தததாகவும், இதன் காரணமாக இவ்வாறு பேசியதாகவும் அவர் தமிழர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

மேலும், ஊடகவியலாளர்கள் சிலர் என்னை வம்புக்கு இழுப்பதை போல் செயற்பட்டனர். என்னை கோபத்திற்கு உட்படுத்தும் வகையில் நடந்து கொண்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்போது தான் நான் சில கருத்துக்களை கூறினேன் என்றும் அந்த கருத்துக்களை பிரதானமாக வைத்து சில தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை குழப்பும் வகையில் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறனை நேரில் சென்று பார்வையிட்ட தமிழக முதல்வர் ஸ்டாலின்



தமிழ்நாடு மாநில முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இல்லத்திற்கு நேரில் சென்று நலன் விசாரித்துள்ளார்.

உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறனை சந்தித்தது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள முகப்புத்தக பதிவிலேயே இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பில், முகப்புத்தக பக்கத்தில் அவர் கூறியிருப்பதாவது,

மதுரைக்குச் சென்றிருந்த போது உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் உடல் நலிவுற்றிருக்கும் செய்தியறிந்து, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தேன்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அவர் கடலூர் சிறைச்சாலையில் இருந்த போது, நான் வேறொரு போராட்ட வழக்கில் அதே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன்.

அப்போது போது ஒரே இடத்தில் இருந்த நாங்கள் பல்வேறு உரையாடல்களில் ஈடுபட்டதை நினைவு கூர்ந்து பகிர்ந்து கொண்டோம். மேலும் பழ.நெடுமாறன் விரைந்து நலம் பெற விழைகிறேன்.' என தெரிவித்துள்ளார்.

# வடக்கில் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு!

வடக்கில் பாடசாலை மாணவர்கள் கல்வியில் இருந்து இடைவிலகும் வீதம் அதிகரித்து உள்ளதாகவும், தாங்களாகவே வாசிக்கும் எழுதும் திறன் ஆரம்ப கல்வி மாணவர்கள் இடையில் குறைவடைந்து வருவதாகவும் வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் கல்விக்காக பெருமளவான நிதியை செலவழித்து வருகிறது. இளம் வயதினர் கல்வியில் சிறந்து விளங்கினால் தான் நாடு முன்னோக்கி செல்லும்.

வடமாகாணத்தை பொறுத்தவரையில் கல்வியில் பின்னோக்கி செல்வது வேதனையான விடயமாகும். வடக்கில் தற்போது பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் விகிதம் அதிகரித்து செல்கிறது.

அதேவேளை, சுயமாக வாசிக்கும், எழு தும் திறன் ஆரம்ப பிரிவு மாணவர்கள் மத்தியில் குறைவடைந்து செல்கிறது. இதுவொரு ஆபத்தான விடயமாகும். எனவே ஆரம்ப பிரிவு மாணவர்களின் சுயமாக வாசிக்கும் எழுதும் திறனை வளர்ப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

# வருகின்றார்கள்! செல்கின்றார்கள்!

ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவினர் வருகை தந்திருக்கின்றனர். பலரை சந்திக்கின்றனர். சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியதை, அவரது ஆதரவாளர்கள் முகநூல்களில் பகிர்ந்து மகிழ்கின்றனர். கடந்த பதின்நான்கு வருடங்களில் இதுபோன்று எத்தனையோ சந்திப்புக்கள் நடந்திருக்கின்றன. இன்னும் பல குழுக்கள் வருவார்கள் செல்வார்கள்.

கடந்த பதின்நான்கு வருடங்களில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் குறிப்பாக சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் பல சந்திப்புக்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆரம்ப காலத்தில், இது போன்ற சந்திப்புக்களுக்கு ஏனையவர்களை அழைப்பதில்லை என்று, பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஊடகங்களில் முறைப்பாடு செய்த சந்தர்ப்பங்களும் இருந்தன. சந்திப்புக்களுக்காக போட்டி போட்டுக் கொண்டனர். இது போன்ற சந்திப்புக்களில் பங்கு கொள்வதை ஒரு பெரும் இராஜதந்திர சாதனையாக கூறிக்கொள்ளும் நடைமுறையும் இருந்தது.

சம்பந்தன் தேர்தல் மேடைகளில் தாங்கள் ஒரு இராஜதந்திர போரில் ஈடுபட்டு வருவதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றார். அந்த இராஜதந்திரப போருக்கு என்ன நடந்தது என்று கேட்டால் எவரால் பதிலளிக்க முடியும்.

மறுபுறம், தமிழர் விவகாரத்தை ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வைத்திருப்பதில் பயனில்லை என்று கூறி வந்த கூறி வருகின்ற, தமிழ் தேசியமக்கள் முன்னணி, அதற்காக என்ன செய்தது என்று கேட்டால் அதற்கும் பதிலிருக்காது. தங்களுக்கு தெரிந்த சொற்களை உச்சரிப்பதையே ஒவ்வொருவரும் சர்வதேச அரசியலென்று கூறிக் கொண்டிருந்தனர். இதில் இன்றுவரையில் தங்களை திருத்திக் கொள்ள எவருமே முயற்சிக்கவும் இல்லை.

ஒரு புறம் சமஷ்டி தான் தமிழ் மக்களுக்கும் தீர்வென்று கூறிவரும் கட்சிகள் – இன்னொருபுறம் அதில் தாங்கள் மட்டுமே உண்மையாக இருப்பதாக கூறிக்கொள்ளும் இன்னொரு தரப்பினர் இவ்வாறு தான் கடந்த பதின்நான்கு வருடங்கள் சென்றிருக்கின்றன. ஆனால் இந்தக் காலத்தில், சர்வதேச தலையீடுகளால் இலங்கை அரசை அடிபணியச் செய்ய முடிந்தது என்றால் அங்கும் பதில் பூச்சியம் தான்.

ஏனெனில் அவ்வாறு எதுவும் நிகழவில்லை. இந்த இடத்தில் கேட்க வேண்டிய கேள்வி இலங்கையின் ஆட்சியாளர்கள் மீது கடுமையான நெருக்கடிகளை போடும் நோக்கிலா, இவ்வாறான அழுத்தங்களை மேற்குலகம் கையாளுகின்றது?

உண்மையிலேயே மேற்குலக அழுத்தங்களின் நோக்கம் தான் என்ன? இந்தக் கேள்விகளுக்கு அறிவுபூர்வமாக பதிலை தேடினால், இலங்கையின் மீது கடுமையான அழுத்தங்களை போட்டுவிடக் கூடாதென்னும் நோக்கில் தான் தற்போது ஒவ்வொரு விடயங்களும் நகர்த்தப்படுகின்றன.

ஏனெனில் அவ்வாறு கடுமையான அழுத்தங்களை போட்டால், சீனா அதனை தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, தங்களை முற்றிலும் இத்தீவிலிருந்து தள்ளி விடும் என்றே மேற்குலகம் கணிக்கின்றது. இலங்கையின் மீதான அழுத்தங்களை, கொழும்பின் ஆட்சியாளர்கள் பாரதூரமாக நோக்காமல் இருப்பதற்கான காரணமும் இதுதான்.

ஐரோப்பிய தூதுக் குழுவல்ல எந்தக் குழு வந்தாலும், தமிழ்கட்சிகள் தங்களை பலப்படுத்திக் கொண்டு, கொழும்புடன் பேரம் பேசக் கூடிய ஆற்றலுடன் இருந்தால் மட்டும்தான் அரசியலமைப்பிலுள்ள விடயங்களையாவது அமுல்படுத்துவதில் வெற்றி பெறலாம்

**28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை நடைபெற்ற முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான ஊட்டும் கரங்கள் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். நிகழ்வு பற்றிய விபரங்களும் புகைப்படங்களும் அடுத்த வாரம் வெளிவரும்.**

# தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்த சிங்கள சட்டத்தரணிக்கு உயிர் அச்சுறுத்தல்!

## அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை

மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக சிறிலங்கா குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தமிழர்களின் பிரச்சனைகளுக்காக குரல் கொடுக்கும் சிங்கள சட்டத்தரணி தனுக்க ரணன்ஞக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிறிலங்கா காவல்துறை தலைமையகத்தில் தாம் முறைப்பாடொன்றை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக சிறிலங்கா குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தாம் முறைப்பாடு செய்தமை தொடர்பில் பலர் தம்மை பாராட்டியிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தமது இந்த நடவடிக்கையை எதிர்த்து சிலர் கருத்து தெரிவித்ததோடு, உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தனுக்க ரணன்ஞக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.



மங்களராமய அம்பிட்டிய சுமண தேரர் தமிழர்களை வெட்டுவேன் என்பதுள்ளிட்ட இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர் மீது நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு கடிதத்தினை அனுப்பியுள்ளதோடு, மனோகணேசன், வேலுகுமார் உள்ளிட்டவர்களும் தேரரைக் கைது செய்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம், மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜீவ்காந் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதோடு ஆதாரங்களையும் கையளித்து நடவடிக்கைகளை முன்னெடுக்கமாறு வலியுறுத்தியுள்ளார். தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தேரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

இந்நிலையில், குறித்த விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பொலிஸார் விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை அமுலாக்குவதற்கும், அமைதியைப் பேணிக்காப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். ஆகவே, முறைப்பாடுகள் தொடர்பில் தற்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அந்த வகையில் வீணான சந்தேகங்களை வெளியிட வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை என்றார்.

இதேவேளை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவர் சீலன் சிவயோகநாதன் வீட்டில் இல்லாத நேரத்தில் பொலிசார் என கூறிய இருவர் அவரது வீட்டுக்கு சென்று விசாரித்து சென்றுள்ளனர்.



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து வருவதாக கூறிய இருவர் நான் வீட்டில் இல்லாதபோது என்னைச் சந்திக்க வேண்டும் என எனது மனைவியிடம் கூறியுள்ளனர் என சீலன் சிவயோகநாதன் தெரிவித்தார்.

அதேவேளை அதில் ஒருவர் பொலிசாருக்குரிய சீருடை அணிந்திருந்தார். மற்றைய நபர் சாதாரண உடையில் பொலிஸ் என பொறிக்கப்பட்டுள்ள தலைக்கவசம் அணிந்திருந்தார்.

இது போன்று பல தடவைகள் நான் வீட்டில் இல்லாதபோது மேற்படி பொலிஸ் நிலையத்தின் பெயரைச் சொல்லி வந்து செல்வது வழமையான ஒரு விடயமாக காணப்படுகிறது.

இச் செயற்பாடானது எனது குடும்பத்தாரை மனதளவில் மிகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் செயற்பாடாக காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கனடா மக்களிடையே புலம்பெயர்வோர் மீது குறைந்து வரும் ஆர்வமும் அனுதாபமும்



கனேடிய அமைச்சர் ஒருவர், சமீபத்தில், கனடாவில் வீடுகள் பற்றாக்குறை பிரச்சினைக்கு புலம் பெயர்வோர் தான் காரணம் என்று கூறியிருந்தார். புலம்பெயர்தல் குறித்த, அரசியல்வாதிகள் சிலருடைய மன நிலைதான் இப்படி இருக்கிறது என்று பார்த்தால், பொதுமக்களுடைய மன நிலையும் புலம் பெயர்தலுக்கு எதிராக மாறியுள்ளது என்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

The Environics Institute மற்றும் the Century Initiative என்னும் இரு அமைப்புகள் இணைந்து, புலம்பெயர்தல் தொடர்பில் கனேடிய பொதுமக்களின் கருத்து என்னவாக உள்ளது என்பதை அறிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டன.

இந்த ஆண்டு, அதாவது, 2023ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 4ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில், அதாவது சமீபத்தில்தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டில் இருந்ததை விட புலம்பெயர்தல் குறித்த மக்கள் கருந்து எந்த அளவுக்கு மாறியுள்ளது என்பதை அந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

2022இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது புலம் பெயர்தலுக்கு ஆதரவாக பதிலளித்தவர்களின் எண்ணிக்கை, தற்போது, அதாவது, 2023இல் மாறியுள்ளது. வீடுகள் தட்டுப்பாட்டுக்கும், கனேடியர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதற்கும் புலம்பெயர்ந்தோர் தான் காரணம் என்னும் மனப்பாங்கு கனேடிய மக்களிடையே அதிகரித்துள்ளது.

கனடாவில் புலம்பெயர்தல் மிகவும் அதிகரித்துள்ளது என்று நினைக்கிறீர்களா என்ற கேள்விக்கு, 10இல் 4 பேர் ஆம் என பதிலளித்துள்ளார்கள்.

வீடுகள் தட்டுப்பாடு குறித்த கவலை கொண்ட 64 சதவிகித வீட்டு உரிமையாளர்கள், கனடாவில் புலம் பெயர்தல் மிகவும் அதிகரித்துள்ளது என்று கருதுகிறார்கள்.

கனடா அதிக அளவில் புலம்பெயர்ந்தோரை ஏற்றுக்கொள்கிறது என்னும் எண்ணம் கொண்ட கனேடியர்களில் 38 சதவிகிதம் பேர், வீடுகள் கிடைப்பதில் பிரச்சினை, வீடுகள் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளுக்கு புலம்பெயர்ந்தோர் தான் காரணம் என கருதுகிறார்கள். இந்த கருத்து உடையவர்கள் எண்ணிக்கை 2022இல் இருந்ததை விட 23 புள்ளிகள் அதிகரித்துள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவரக்ளில் 25சத விகிதத்தினர், புலம்பெயர்ந்தோர் வரிப்பணத்தை வீணாக்குவதாகவும், மேலும் 25 சதவிகிதத்தினர், புலம்பெயர்ந்தோரால் கனேடியர்களுக்கு வேலை கிடைப்பதில் பிரச்சினை ஏற்படுவதாகவும், 19சதவிகிதத்தினர், புலம் பெயர்ந்தோரால் மக்கள் தொகை மிக அதிகமாக அதிகரித்துள்ளதாகவும் கருதுகிறார்கள். மொத்தத்தில் புலம்பெயர்தல் மீதான ஆதரவு, கனேடியர்களிடையே குறைந்துள்ளதையே இந்த ஆய்வு காட்டுகிறது.

# கட்சிகளில் கட்டமைப்பு மாற்றம் தேவை?

சம்பந்தனை பதவி விலக வேண்டுமென்று கூறப்பட்ட கருத்து தமிழ் அரசியல் சூழலில் வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்திருக்கின்றது.

தமிழரசுக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படையாக தெரிவித்திருந்த விடயம் தொடர்பில், ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் வெளிவருகின்றன.

குறிப்பாக திருகோணமலையில் சம்பந்தனுக்கு ஆதரவானவர்கள் சுமந்திரனை விமர்சித்து வருகின்றனர். திருகோணமலை விடயத்தில் கருத்துக் கூறுவதற்கு அவர் யாரென்றும் கேட்குமளவிற்கு கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன.

இன்னொருபுறம், இயலாவிட்டால் புதியவர்களிடம் பதவிகளை ஒப்படைக்கவேண்டும் அதுவே சரியானதென்றும் கருத்துக்கள் வெளிவருகின்றன. சுமந்திரன் பற்ற வைத்த நெருப்பு ஒரு விவாதத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதாவது, இலங்கை தமிழரசுக கட்சி மட்டுமல்ல, தமிழ் தேசிய அரசியலை முன்னிறுத்துவதாக கூறிக்கொள்ளும் கட்சிகள் அனைத்திலும் காலத்திற்கு ஏற்றவாறும், தூர நோக்குடன் அரசியலை கையாளக்கூடிய புதிய தலைமுறையொன்றை உள்வாங்குவது அவசியம் இதில் குறிப்பாக ஒரு பாரம்பரிய கட்சியென்னும் வகையில் இலங்கை தமிழரசுக் கட்சியில் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

அரசியல் தலைமைத்துவம் இரண்டு வகையானது. ஒன்று புலமைத்துவ நிலையிலான தலைமைத்துவம். இரண்டு, செயல்பாட்டு தளத்திலான தலைமைத்துவம்.

இந்த இரண்டும் ஒருங்கு சேர இருந்தால் சிறப்பானது ஆனால், இரண்டையும் சமநேரத்தில் கையாளக் கூடியவர்களோ அரிதானது.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு பின்னர் அவ்வாறான ஒருவரை இதுவரையில் தமிழ் சமூகம் கண்டிருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. அப்படியான தகுதியுள்ளவர்கள் தலைமை தாங்கும் போது, குறித்த இனம் பெரும் நன்மைகளை பெறும்.

அவ்வாறில்லாத போது, இரண்டையும் ஒரிடத்தில் திரட்டக் கூடியவர்களை கட்சிகள் கொண்டிருக்க வேண்டும். அந்த வகையில் வயதில் கூடியவர்கள், தங்களின் அறிவாலும் அனுபவத்தாலும் கட்சிக்கும், சமூகத்திற்கும் பலம் சேர்க்க முடியும்.

செயல்பாட்டு நிலையில் ஆளுமையுள்ளவர்கள் அந்தத் தளத்தில் இயங்க முடியும். இந்தப் பின் புலத்தில் நோக்கினால், தமிழரசு கட்சியில் முதிய நிலையிலிருக்கும் அரசியல்வாதிகள் தங்களின் அனுபவத்தை வழங்கும் வகையில் செயல்படுவதில் தவறில்லை.

ஆனால் அதற்கும் இயலாதவர்கள் தொடர்ந்தும் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. இதேபோன்றுதான் ஏனைய கட்சிகளும். ஒவ்வொரு கட்சிகளும் புதிய அரசியல் சவால்களுக்கு ஏற்ப, தங்களின் கட்சிகளின் கட்டமைப்பை மாற்றியமைக்கவேண்டும்.

கடந்த பதின்நான்கு வருடகால அரசியல் நகர்வுகள், தமிழ் தேசிய கட்சிகளதும், அதன் தலைவர்களிதும் ஆற்றலை தெளிவாக இனம் காட்டியுள்ளது. இதற்குப் பின்னரும் தங்களை சகல–கலா வல்லவர்களென்று எவரேனும் கூறினால், அவர்களால் எவ்வித பயனுமில்லை.

இந்த நிலையில் தொடர்ந்தும் வெற்று சுலோகங்களில் நேரத்தை விரயம் செய்து கொண்டிருக்காமல், புதிய தலைமுறை ஆற்றலாளர்களை எவ்வாறு கட்சிக்குள் உள்வாங்கலாம், என்னுமடிப்படையில் சிந்திக்க முன்வர வேண்டும்.

தொடர்ந்தும் இயங்க முடியாதவர்கள், புதியவர்களுக்கு இடமளிக்கும் வகையில் கட்சியின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# அமெரிக்க செனெட்டில் அன்டனி பிளிங்கென் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை ஆர்ப்பாட்டம்




அமெரிக்க செனெட்டில் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை காசாவில் யுத்தநிறுத்தத்தை கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் உரைக்கு குழப்பம் விளைவித்தனர்.

அமெரிக்க இராஜாங்க பாதுகாப்பு செயலாளர்கள் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கான நிதி குறித்து செனெட்டில் விளக்கமளித்தனர். இஸ்ரேலின் ஹமாசிற்கு எதிரான நடவடிக்கைகளிற்கு 14. 3 பில்லியன் டொலர்கள் அவசியம் என அவர்கள் தெரிவித்தனர்.

அன்டனி பிளிங்கென் தனது வாக்குமூலத்தை வழங்குவதற்காக காத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் மீண்டும் கூச்சலிட்டனர். இதன் காரணமாக அன்டனி பிளிங்கென் தனது வாக்குமூலத்தை இடைநிறுத்தினார் அமர்வை பல தடவைகள் இடைநிறுத்தவேண்டிய நிலைக்கு செனெட் தள்ளப்பட்டது. பின்னர் நாடாளுமன்ற பொலிஸார் அவர்களை அழைத்துச்சென்றனர்.

டேர்க்சென் செனெட் அலுவலக கட்டிடத்திற்குள் சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

யுத்தத்திற்கு எதிரான கொடெபிங் என்ற அமைப்பின் ஆர்ப்பாட்டக்காரர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பு உக்ரைனிற்கு ஆயுதங்களை அனுப்புவதை எதிர்த்து வருகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் காசா முற்றுகைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்

# வெளிநாடுகளின் தடைகள் மூலம் முன்னாள் ஜனாதிபதிகள் இராணுவ அதிகாரிகள் அவமானப்படுத்தப்படுகின்றனராம்

அமெரிக்கா கனடா அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்னாள் ஜனாதிபதிகள் ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவ அதிகாரிகளிற்கு எதிராக விதித்துள்ள பயண தடைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அவமானகர மான நிலை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். 25ம் திகதியிடப்பட்ட கடிதத்தில் முன் னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச கோட்டா பாய ராஜபக்ச பாதுகாப்பு படைகளின்



பிரதானி சவேந்திரசில்வா உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சரத் வீர சேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் எவருக்கும் எதிராக உள் நாட்டு வெளிநாட்டு நீதிமன்றங்களில் யுத்த குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்த ப்படவில்லை என சரத்வீரசேகர தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப் பதற்கான அரசியல் இராணுவ தலைமை த்துவத்தை வழங்கியவர்களை அவமான ப்படுத்துவதற்காக மேற்குலகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பிரேரணை களை பயன்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சி யாளர்கள் ஜெனீவா சாசனம் மற்றும் யுத்தம் குறித்து மனித உரிமை பேரவை தெளிவுபடுத்த தவறி விட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சில அதிகாரிகள் அமைதிப்படை நட வடிக்கைகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை, ஆதார மற்ற யுத்த குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் அவர்களின் நியமனங்கள் தாமதிக்கப்பட்டன அல்லது நிராகரிக்கப் பட்டன எனவும் சரத்வீரசேகர குறிப்பிட் டுள்ளார்.

## தலைவர் பிரபாகரனின் படத்தைப் பிரசுரித்தமைக்காக யாழ்.உதயன் பத்திரிகை ஆசிரியர் மீது விசாரணை!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையில், தமிழீழ விடுத லைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் புகைப்படைத்தை வெளியிட்டமை தொடர்பில் பத்திரிகை யின் ஆசிரியரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடு த்து 01 நவம்பர் 2023 புதன்கிழமை வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி புலிகள் அமைப் பின் தலைவரின் புகைப்படத்துடன் , உதயன் பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

அது தொடர்பில் விசாரணைக்காக பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கு.டிலீப் அமுதனை சுமார் மூன்றாண்டு களின் பின்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகத்திற்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு தலைமை அலுவலகத்தில் செய்தி ஆசிரியரிடம் காலை 09 மணி க்கு விசாரணைகளை ஆரம்பித்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மதியம் 1.30 மணி வரையிலான சுமார் 4.30 மணி நேரம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வாக்கு மூலம் பெற்று



ள்ளனர். அதேவேளை புலிகளின் தலை வரின் புகைப்படத்தை பிரசுரத்தமைக் காக 2020ஆம் நவம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாண தலைமை காவல் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதி காரி பிரசாத் பொர்ணான்டோ உதயன் பத்திரிகை ஆசிரியரான டிலீப் அமுதன் உள்ளிட்டவர்களுக்கு எதிராக யாழ்ப் பாண நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

வழக்கு விசாரணைகளை நடைபெற்று வந்த நிலையில் டிலீப் அமுதன் உள்ளி ட்ட சிலரின் பெயர்கள் வழக்கில் இரு ந்து நீக்கப்பட்டு, அவர்கள் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். இருந்த போதிலும் குறித்த வழக்கு நீதவான் நீதி மன்றில் நிலுவையில் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத் தில் இலங்கை இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவினால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் 01 நவ 2023 மாலை ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் வணக்கம் இடம் பெற்றதை தொடர் ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்க ப்பட்டன

இவ்வாண்டும் வழமை போன்று நவம்பர் (27) மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம் பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவு களையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் ஊடக ங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# "தமிழர்களை ஒட்டுமொத்தமாக கொன்று அழிப்பேன்" புத்த பிக்கு பேச்சு - இலங்கையில் கொந்தளிப்பு!

இலங்கையில் தமிழர்களை ஒட்டு மொத்தமாக இனப் படுகொலை செய்ய வேண்டும் என்று மட்டக்களப்பு பகுதியிலுள்ள மங்களாராமய அம்பிட்டிய சுமணரத்ன தேரர் என்ற புத்த பிக்கு தெரிவித்த கருத்து, இன்று பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கருத்து பாரதூரமானது என வும், அந்த புத்த பிக்கு கைது செய்யப்பட வேண்டும் எனவும் பல்வேறு தரப்பின ரும் குரல் எழுப்பி வருகின்றனர்.

வீதியின் நடுவே இருந்தவாறு இன வாதத்தை தூண்டும் வகையில் ஆக் ரோஷமாக அவர் தெரிவித்த கருத்து, சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு கள்ளியன்காடு பகுதி யில் வீதியோரத்தில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வு பணிகளின் போது, தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குற்றஞ் சுமத்தியிருந்தார்.

இந்த கல்லறை அமைந்துள்ளதாக கூறப்படும் இடத்திற்கு வருகை தந்த வாறே, அவர் தமிழர்களுக்கு எதிராக இவ்வாறான கருத்தை வெளியிட்டார்.

மட்டக்களப்பு நிர்வாகத்திலுள்ள பெரும்பான்மையினர் தமிழர்கள் என்ற அடிப்படையில், சிங்களவர்களின் அடை யாளங்களையே தமிழர்கள் இல்லாது





செய்வதாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட் டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியம் போன்ற அரசியல்வாதிகளே, சிங்களவர்களின் அடையாளங்களை அழிப்பதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். தமிழர்க ளுக்கு எதிரான புத்த பிக்குவின் இனவாத கருத்து இலங்கையில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு**

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தமி ழர்களுக்கு எதிராக வெளியிட்ட கருத்து தற்போது பாரிய சர்ச்சையை தோற்று வித்துள்ளது.

தமிழர்களுக்கு எதிராக கருதுக்களை வெளியிட்ட அம்பிட்டிய சுமணரத்ன தேரரை உடனடியாக கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின் றனர்.

மட்டக்களப்பு - மங்களாராமய அம் பிட்டிய சுமணரத்ன தேரர் வெளியிட்ட கருத்திற்கு, தமிழரசுக்கட்சி கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தமிழரசு கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கடிதமொன்றின் ஊடாக தமது எதிர்ப்பை வெளி யிட்டுள்ளார்.

தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டுவேன் என அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் வெளியிட்ட கருத்து தொடர் பில் ஏன் இதுவரை உடனடி நடவ டிக்கை எடுக்கவில்லை என எம்.ஏ.சுமந்தி ரன், போலீஸ் மாஅதிபரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

போலீஸ் மாஅதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலி யுறுத்தியுள்ள அவர், ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், தமது கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ஆர். சாணக்கியனை, அம்பிட் டிய சுமணரத்ன தேரர் தொடர்ச் சியாக எதிர்த் துக் கருத்துக்களை வெளி யிட்டு வருவதாகவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மங்களாராமய அம் பிட்டிய சுமண ரத்ன தேரர் வெளியிட்ட கருத் துக் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மகா நாயக்க தேரர்கள் உள் ளிட்ட அனைவரும் கவனத்திற்கு எடுத்து, தேரருக்கு எதிராக கடுமையான நடவ டிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவிக்கின்றார்.

மங்களாராமய அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தமிழர்களுக்கு எதிராக வெளியிட்ட கருத்து தொடர்பில் கருத்து ரைத்த போதே அவர் இதனைக் கூறி னார்.

"மங்களாராமய அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் மீண்டும் இனவாதத்தை கக்கியிருக்கின்றார். அதற்கு இடமளிக்க முடியாது. நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும். நடுத் தெருவிற்கு வந்து, தமிழர்களை வெட்ட வேண்டும். கொல்ல வேண்டும் என்று பேசினாலும், சைகை யினாலும் செய்கின்றார் சொல்கின்றார். இது என்ன? மனநோயா?

அவருக்கு என்ன பிரச்னை என்று தெரியவில்லை. அவரின் தாயின் மயான பூமியிலே ஏதோ நடந்து விட்டதாக சொல்கின்றார். அது உண்மை யானால், அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராகவும் குற் றஞ்சாட்டுகின்றார். மட்டக் களப்பு மாவட்ட மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக குற்றஞ்சாட்டுகின்றார்.

அதற்கு வேறு வழியிருக் கின்றது. போலீஸில் புகார் செய்யலாம். மாவட்ட ஒருங்கி ணைப்பு குழுக்கூட்டத்தில் பேச லாம். ஒரு முடிவு காணலாம். வழியிருக்கின்றது. அதனை செய்யாமல் நடுத் தெருவிற்கு வந்து தமிழர்களை கொல் வேன் என்று சொல்ல முடியாது.

ஐ.சி.சி.பி.ஆர் சட்டம் என்று ஒன்று நாட்டில் இருக்கின்றது. அதன் பிரகாரம், எவரது இனத்திற்கு எதிராகவும் பேச முடியாது. இனங்களுக்கு இடையில் பகைமையை ஏற்படுத்த முடியாது. இந்த அம்பிட்டிய தேரரும் கைது செய் யப்பட்டே ஆக வேண்டும். அதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். நாட்டிலுள்ள பௌத்த மகாநாயக்க தேரர்களும் இதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

அவரை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அது மட்டுமல்ல, நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள், இதை கவனத்தில் எடுக்க வேண்டும். நாட்டின் சட்டம் ஒழுங்கு அமைச்சர் இதனை கவனத்தில் எடுக்க வேண்டும். ஜனாதிபதி வழமை போல இதையும் கடந்து போகக்கூடாது என கூறிக்கொள்ள விரும்புகின்றோம்" என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.



**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்பு**

இனவாதத்துக்கு தூபமிடும் வகை யில் செயற்படும் மட்டக்களப்பு - அம் பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு போலீஸ் மாஅதிபரிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.



அத்துடன் இந்த விவகாரம் தொடர் பில் போலீஸ் தலைமையகத்திலும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

மேலும், குறித்த தேரரின் கடந்த கால செயற்பாடுகள் இன மோதலை ஏற்படுத் தும் நோக்கில் அமைந்துள்ளதால் அது தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும், பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், தனக் கும் அறிக்கையொன்றை வழங்குமாறும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

"தமிழ் மக்களை இலக்கு வைத்து அம் பிட்டிய சுமணரத்ன தேரர் வெளி யிட்டுள்ள கருத்துகள் இனக்குரோதத்தை விதைக்கும் வகையில் உள்ளதுடன், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை சீர்கு லைக்கும் வகையிலும் அமைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றால் எமது நாட்டு பொருளாதாரம் சரிந்தது. அதன் பின்னர் அரசியல் குழப்பத்தால் அதல பாதாளத்திலேயே விழுந்தது. எனவே, அனைவரும் இணைந்து செயற்பட் டால்தான் இந்நாட்டை கட்டியெழுப் பலாம்.

நாட்டில் முன்னேற்றத்துக்கு இன, மத நல்லிணக்கம் மிக முக்கியம். இந்நிலை யில் இனவாதம் கக்கி, இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் குறித்த தேரர் செயற்பட்டு வருகின்றார்.

கருத்து சுதந்திரம் என்ற போர்வை யில் அவர் சட்டத்தை கையில் எடுத்து செயற்பட முற்படுகின்றார். எனவே, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்," என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு தமிழர்களுக்கு எதிராக அம் பிட்டிய சுமணரத்ன தேரர் வெளியிட்ட கருத்துக்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வடக்கு கிழக்கு மக்கள் போராட்டத்திற்கான ஒத்துழைப்பு இயக் கம் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளது.

வடக்கு கிழக்கு மக்கள் போராட்டத் திற்கான ஒத்துழைப்பு இயக்கம் சார்பில் ராஜ்குமார் ரஜீவ்காந்த் இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

மட்டக்களப்பு மங்களாராமய அம்பிட்டிய சுமணரத்ன தேரர் இதற்கு முன்னரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளாகி வந்த நிலையிலேயே, தற்போது தமிழர்களை வெட்டுவதாக கூறி மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

மட்டக்களப்பு நகரை அண்மித்துள்ள பௌத்த விகாரையான மங்களாராமய விகாரையின் விஹாராதிபதியாக (பிர தான பிக்கு) அவர் செயற்பட்டு வருகின் றார். •

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 ஒக்டோபர் 2023 முதல் 03 நவம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பையா யோகரத்தினம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 04 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது மனைவி ஒரே தங்கை அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சுப்பையா யோகரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம்

சரவணை மேற்கு வேலனையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பு 6ஐ வதிவிடமாகவும் திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### DR.சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்ப்பாணம், கொழும்பு சட்டவைத்திய அதிகாரி Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது 16வது ஆண்டு நினைவு நாள் 25 ஒக்டோபர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி தங்கேஸ்வரி சிவநேசன் அவர்களது 77வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி தங்கேஸ்வரி சிவநேசன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



31 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் சங்கரின் எட்டாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



26 ஒக்டோபர் 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் தம்பதிகளின் செல்வப்புதல்வன் எரின்டனின் 13வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 01 நவம்பர் 2023 புதன்கிழமை செல்வன் எரின்டன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



03 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன், ஜெவின் செல்வி சரண்யா இணையர்கள் திருமண பந்தத்தில் இணையும் நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்


## 8வது பிறந்த நன்நாள் வாழ்த்து



## செல்வன் டெனன் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் சங்கரின் எட்டாவது பிறந்த நன்நாள் 31 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந் தார்.


அகவை எட்டு காணும் செல்வன் டெனன் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

We take the pleasure in inviting you to the launch of

# Untold Truth of Tamil Genocide

(Biography of Dr. T. Varatharah)
by Raji Patterson




**Sunday,
November 12, 2023
at 6PM**

JC's Banquet &
Convention Centre
**1686 Ellesmere Rd
Scarborough, ON**

**RSVP:**
drtvarathan@gmail.com
or
437.328.5974


Raji Patterson


Dr. T. Varatharajah

# தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்

## நூல் வெளியீடு

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் போது, ஸ்ரீலங்கா அரச படைகளின் கோரத் தாக்குதல்களிற்கு மத்தியில், காயமடைந்த பல்லாயிரக் கணக்கான மக்களிற்கு மருத்துவ சேவைகள் வழங்கி பாதுகாத்தவரும்,

2009ம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற தமிழினப்படுகொலையின் ஐ.நா. சபையின் விசாரணையின் உத்தியோக சாட்சியாக விளங்குபவரும்,

தமிழினப்படுகொலைகளிற்கும், தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக தொடர்ந்து குரல் கொடுத்துவரும்

**டாக்டர் துரைராஜா வரதராஜா**
அவர்களின்
**தமிழினப் படுகொலையின்
சொல்லப்படாத உண்மைகள்**
**என்னும் ஆங்கில நூல் வெளியீடு**

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வில் நீங்களும் கலந்துகொண்டு உங்கள் ஆதரவை வழங்க முற்கூட்டிய பதிவுக்கு தொடாபு கொள்ளுங்கள்.

drtvarathan@gmail.com
or
437.328.5974

தமிழ் மிரர்
Tamil Mirror

# Awards Gala 2023.

**NOVEMBER 5 SUNDAY 4.00 PM**






**T. Ramalingam**
Motivational Speaker
Tamil Nadu




**Deshan Styler**
South African Music Sensation

**Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126**


'தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்'
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்'இல்
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2023 - திங்கட்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
றொறன்ரோ
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

# NEW HOMES In North Whitby
# விற்பியில் புத்தம் புதிய வீடுகள்




BROOKLIN TOWNS


**NOW SELLING**

**2 AND 3-STORY TOWNS** IN NORTH WHITBY
**3 BED ROOMS**

MADISON GROUP









**FIRST TENTATIVE CLOSING DATE May 2025**

**DEPOSIT STRUCTURE**

$20,000 on Signing
$10,000 in 30 days
$10,000 in 60 days
$10,000 in 90 days
$10,000 in 120 days
$10,000 in 150 days
$10,000 in 180 days
$10,000 in 210 days
$10,000 in 240 days
$10,000 in 270 days

**Total Deposits: $110,000**






*For More Information Please Call*

**Kamal** Navaratnam
Sales Representative

Direct: **416-450-2424**
E mail:kamal@kamalrealtor.ca

KAMAL NAVARATNAM REAL ESTATE

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

**RE MAX Community Realty Inc.**
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9

Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated

*Trusted and reliable services*



# முத்தவெளியில் திரண்ட மக்கள்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்.பொது வைத்தியசாலையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நாள் அது என்பதனால் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியை வேறொரு நாளில் வைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்டிருந்தது. அக்கோரிக்கையை சந்தோஷ் நாராயணன் ஏற்கவில்லை. ஆனால் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் போரில் உயிர் நீத்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் ஈழப்போரைப் பிரதி பலிக்கும் பாடல்கள் பாடப்பட்டன. அப்பொழுது அங்கு கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரித்து அதைக் கொண்டாடினார்கள்

அது ஒரு மழை நாள். அன்று பின்னேரம் மழை விட்டுத் தந்தது. முத்த வெளியில் கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை காணாத சன வெள்ளம். அந்த இடத்தில் இதற்கு முன் வர்த்தகக் காட்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றுக்கும் மக்கள் திரண்டு வந்தார்கள். ஆனால் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சிக்கு முன்னப் பொழுதும் இல்லாத அளவுக்கு சனம் திரண்டது.

முனியப்பர் கோயிலுக்கு முன்னுள்ள வெளியிலும் சாலைகளின் இரு புறங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன. பால் வேறுபாடு இன்றி, வயது வேறுபாடு இன்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி அது. பாடகர்கள் பாடப்பாட அங்கு கூடியிருந்த இளையோர் உற்சாகமாக ஆடினார்கள்.

அது தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையைக் காட்டியது. அவர்கள் கொண்டாட விரும்புகிறார்கள். கொண்டாடுவதற்கு கிடைக்கும் எந்த ஒரு தருணத்தையும் அவர்கள் இழக்க விரும்பவில்லை. பெரு விழாக்கள், பெருஞ் சந்தைகள் தொடக்கம் தனிப்பட்ட கொண்டாட்டங்கள் வரை மக்கள் ஆடிப்பாடி சந்தோசமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் இல்லை. இச்சைகளைத் துறந்தவர்கள் இல்லை. எனவே கொண்டாடுவார்கள்.

அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை எப்பொழுது ஒழுங்குபடுத்த வேண்டும் எப்பொழுது ஒழுங்குபடுத்தக் கூடாது என்பதனை தீர்மானிக்க முற்படும் கட்சி அல்லது மக்கள் இயக்கம் ஒன்றில் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அல்லது அங்கு திரளும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். ஏற்பாட்டாளர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் தமது மக்களை அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்குமாறு கேட்க வேண்டும். ஆனால் அவ்வாறு தமிழ் மக்களை வழிநடத்தும் அளவுக்கு தமிழ் தேசியப்பரப்பில் ஒரு கட்சியோ மக்கள் இயக்கமோ இல்லை. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் பொதுக் கருத்தைத் திரட்டுமளவுக்கு சக்திமிக்க கட்சியும் கிடையாது. மக்கள் இயக்கமும் கிடையாது.

முதலாவதாக கட்சிகளிடம் 2009க்குப் பின்னரான இளைய தலைமுறையின் கூட்டு மனோநிலையை வசப்படுத்தவல்ல பொருத்தமான ஒரு கலைத்தரிசனம் இருக்க வேண்டும். சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஊடக வியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார்... மக்களுடைய இக்கூட்டு மனோநிலையை கட்சிகள் விளங்கி வைத்திருக்கின்றனவா? மக்களை விடுதலைக்கான கலையை நோக்கி ஈர்க்கத்தக்க செயல் திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமாவது உண்டா? எந்த ஒரு கட்சியிடமாவது கலை பண்பாட்டு இயக்கங்கள் உண்டா? என்று. கலை இல்லாத ஒரு படை மந்தப்படை என்று சீனப் புரட்சியின் தலைவர் மாவோ சேதுங் சொன்னார். பண்பாடு தான் தேசிய விடுதலையின் திறப்பு என்று ஆபிரிக்க அறிஞரும் சுதந்திரப் போராட்டத் தலைவருமான அமில்கார் கப்ரால் சொன்னார்.

ஆயுதப் போராட்ட கால கட்டத்தில் எல்லா விடுதலை இயக்கங்களிடமும் கலை கலாச்சார அமைப்புகள் இருந்தன. ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு இயங்கியது. அது விடுதலையை ஒரு மறுமலர்ச்சியாகப் பார்த்தது. பண்பாட்டு மறுமலர்ச்சி. அரசியல் மறுமலர்ச்சி.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலை ஒரு பிரிக்கப்படவியலாத பகுதியாக இருந்தது. பொங்குதமிழ் பேரெழுச்சிகளிலும் அப்படித்தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் அரசியல் அரங்கில் காணாமல் போனவற்றின் பட்டியலில் கலை பண்பாட்டு இயக்கங்களும் சேர்ந்து விட்டன. எழுக தமிழ்களுக்கு இசை இருக்கவில்லை் கலை இருக்கவில்லை.

பொங்குதமிழ் எழுச்சிகளை ஒழுங்கமைத்தவரும் அரங்கச் செயற்பாட்டாளரும் ஆகிய கலாநிதி சிதம்பரநாதன் கந்தர் மடத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்தி வருகிறார்.

ஆனால் கட்சிகள் மத்தியில் அவ்வாறான கலை விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தமது மக்களை தமது அரசியல் இலக்குகளை நோக்கித் திரட்டுவதற்குத் தேவையான கலைத் தரிசனம் எந்த ஒரு கட்சியிடமும் கிடையாது. சில பாடல்கள் சில நாடகங்கள் தவிர, கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒரு பெரிய கலை வறட்சி நிலவுகிறது.கடந்த ஆண்டு நிகழ்ந்த கோட்டா கோகமவின் கலை வெளிப்பாட்டோடு ஒப்பிடுகையில் இது பாரதூரமான வறட்சி.

ஓர் ஆயுதப் போராட்டத்தின்போது சமூகம் பெருமளவுக்கு மூடப்பட்டி ருக்கும்.அது காவலரண்களால் திட்டவட்டமாக மூடப்பட்டிருக்கும். ஆனால் போரில்லாத நாட்களில் அவ்வாறல்ல. குறிப்பாக போரில் தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகத்தை எப்படித் திறப்பது? எங்கே திறப்பது? எதை நோக்கித் திறப்பது? என்பதனை போரில் வெற்றி பெற்ற தரப்பே தீர்மானிக்கின்றது. கடந்த 15 ஆண்டுகளில் அவ்வாறு திறக்கப்பட்ட வழிகளின் ஊடாக நுண்கடன் நிதி நிறுவனங்கள் வந்தன. பிளாஸ்டிக் வியாபாரிகளும் அரும்பொருட்களைக் கவர்ந்து செல்வோரும் வந்தார்கள். போதைப்பொருள் வியாபாரிகளும் முகவர்களும் வந்தார்கள். கிரீஸ் மனிதன் வந்தான்.குள்ள மனிதன் வந்தான். வேறு யார் யாரோ எல்லாம் வந்தார்கள். இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்களை எப்படிப் பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தோற்கடிப்பது என்று சிந்தித்து திட்டமிட்டு வெளியில் இருந்து பல்வேறு வகைப்பட்ட சக்திகளும் தமிழ்ச் சமூகத்தில் உட் பாய்ச்சப்படுகின்றன.

ஒரு காலம் இளையவர்கள் உன்னதமான இலட்சியங்களால் வழி நடத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. இளையவர்களை எப்படி அரசியல் நீக்கம் செய்யலாம்? அவர்களை எப்படிப் போதைக்குள் மூழ்கடிக்கலாம்? அவர்களுடைய கைகளில் எப்படி வாள்களைக் கொடுத்து மோத விடலாம்? அவர்களுடைய நம்பிக்கைகள் விசுவாசத்தைத் கவனக் குவிப்பை எப்படி இடம் மாற்றலாம்? அவர்கள் மத்தியில் இருந்தே எப்படி முகவர்களை உருவாக்கலாம்? என்றெல்லாம் சிந்தித்து செயல்படுவதற்கு அரச பலமும் அரச வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அது ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படுகின்றது. ஒருங்கிணைக்கப் படுகிறது. அது ஒரு பண்பாட்டுச் சிதைப்பு ஒரு பண்பாட்டு நீக்கம். அதை எதிர் கொள்வதற்கு தமிழ்ச் சமூகம் தயாராக உள்ளதா? அதை குறித்து தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் கலைத் தரிசனங்கள் உண்டா?

இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு மண்ணை விட்டு எப்படி வெளியேறலாம் என்று இளையவர்கள் சிந்திக்கும் ஒரு கால கட்டம் இது. வெளி நாட்டுக்கு போவதற்காக தங்களை தயார்படுத்தும் இளையோர் மத்தியில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக அண்மையில் ஒரு மனநல மருத்துவர் சுட்டிக்காட்டினார். இது என்னுடைய நாடில்லை. இங்கே நான் இருக்கப் போவதில்லை. இருக்கின்ற கொஞ்ச காலத்துக்கு எப்படியும் இருந்து விட்டு போகலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எப்படியும் இருந்து விட்டுப் போகலாம் என்பதுதான் பண்பாட்டுச் சிதைவு.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது நாடாளுமன்றத்தில் கொல்வின்.ஆர்.டி.சில்வா பின்வருமாறு சொன்னார்... தமிழர்களை நீங்கள் அவமதித்தால் கேவலமாக நடத்தினால் துஷ்பிரயோகம் செய்தால் ஒடுக்கினால் அவர்களுக்குக் கரைச்சல் கொடுத்தால், அந்தப் போக்கின் விளைவாக சிலோனில் (இலங்கையில்) தனக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியை, ஒரு பண்பாட்டைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட அந்த இனத்துவ இருப்பிற்குள் இருந்து ஒரு புதிய தேசியவாதம் எழுவதற்கு நீங்கள் காரணமாக அமைவீர்கள். இப்பொழுது அவர்கள் கேட்பதை விடவும் அப்பொழுது அவர்கள் அதிகமாக கேட்பார்கள். அதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டி வரும்''

அதாவது பலமான ஒரு பண்பாட்டை கொண்டிருக்கும் தமிழர்களை ஒடுக்கினால் வரக்கூடிய விளைவுகளை குறித்து அவர் எச்சரிக்கின்றார். அது தான் உண்மை. தமிழ் மக்கள் ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்டவர்கள். கீழடி ஆய்வுகளின்படி தமிழ் வேர்கள் மேலும் ஆழத்துக்குச் செல்கின்றன. ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்ட மக்களைள்மிகப் பலமான பண்பாட்டு நடுத்தர வர்க்கத்தை கொண்டிருக்கும் மக்களை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கடித்தாலும், அரசியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாகத் தோற்கடிப்பது கடினம் என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

ஆயுதப் போராட்ட காலகட்டமும் கடந்த 14 ஆண்டுகளும் ஒன்றல்ல. மாறி வரும் தொழில்நுட்பச் சூழலை் மாறிவரும் அரசியல் பண்பாட்டுச் சூ ழலைத்தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் கூட்டுக் உளவியலின் மீது எப்படிச் செல்வாக்கு செலுத்துவது? அதை அரசியல் நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து அதை எப்படிக் காப்பாற்றுவது? அதைப் பண்பாட்டு நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து எப்படிக் காப்பாற்றுவது? அதை விடுதலைக்கான பண்பாட்டை நோக்கி எப்படி வழி நடத்துவது?

கொல்வின்.அர்.டி.சில்வா கூறியது போல தமிழ் மக்களின் தனித்துவமான பண்பாடு தான் தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் பிரதான மூலக்கூறுகளில் ஒன்று ஆகும். ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்கள் ஐந்து. நிலம் அதாவது தாயகம்இனம் பொது மொழி பொதுப் பண்பாடுபொதுப் பொருளாதாரம் என்பனவே அந்த ஐந்து மூலக் கூறுகளும் ஆகும்.

எனவே 2009 க்குப் பின்னரான பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் எவரும் அதன் தக்கபூர்வ விளைவாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறார்கள். அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஒரு தேசமாக திரட்டாமல் கட்சிகளாகப் பிரிக்கும் எவரும் பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த முடியாது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஹமாஸை வேரோடு அழிப்பது காஸாவுக்கு பேரழிவாக முடியுமா?

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு 'மத்திய கிழக்கை மாற்றுவோம்' என்று சூளுரைத்திருக்கிறார்.

முன்பிருந்த சூழ்நிலை 'திரும்பப் போவ தில்லை' என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

ஆனால் இஸ்ரேலிய படைகள் காஸா பகுதியில் தாக்குதல்களை அதிகரித்து, பாலத்தீனியர்களுக்கு புதிய அவசர எச்ச ரிக்கைகளை விடுத்து வருகின்றன.

இந்தப் போர் எங்கே போகிறது? அடு த்து என்ன நடக்கும்?

அக்டோபர் 7ஆம் தேதி நடந்த தாக்குத லுக்குப் பிறகு, இஸ்ரேலிய அதிகாரிகள் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாக வும் காஸா பகுதியில் இருந்து ஹமாஸை வேரோடு பிடுங்கப் போவ தாகத் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஆனால் பெரும் இராணுவ வலிமையை இடை விடாமல் பயன்படுத்துவதைத் தவிர, இந்த இலக்கு வேறு எந்த வழி களில் அடையப்படும் என்பது தெளி வாகத் தெரியவில்லை.

டெல் அவிவ் பல்கலைக்கழகத்தில் பாலத்தீன ஆய்வு மன்றத்தின் தலை வரான மைக்கேல் மில்ஷ்டீன், போரு க்குப் பின் என்ன செய்வது என்ற திட்டம் இல்லாமல், இதுபோன்ற ஒரு வரலாற்று முன்னெடுப்பைச் செய்யக் கூடாது என்கிறார்.

இஸ்ரேலிய இராணுவ உளவுத்துறையில் பாலத்தீன விவகாரங்களுக்கான முன்னாள் தலைவரான மில்ஷ்டீன், அதற்கான திட்டமிடல் இன்னும் துங்கவில்லை என்ற அச்சத்தைத் தெரிவிக்கிறார். அது இப்போதே செய்யப்பட வேண்டும்,' என்று அவர் கூறுகிறார்.

## படைகளை வெளியேற்றிய மறுநாள் என்ன நடக்கும்?

மேற்கத்திய ராஜதந்திரிகள் எதிர்காலம் குறித்து இஸ்ரேலுடன் தீவிரமாக விவா தித்து வருவதாகக் கூறுகின்றனர். ஆனால் இதுவரை எந்த முடிவும் தெளி வாக எட்டப்படவில்லை.

ஒரு நிலையான திட்டம் இல்லவே இல்லை,' என்று ஒரு ராஜதந்திரி கூறு கிறார். 'நீங்கள் காகிதத்தில் சில யோசனைகளைத் திட்டமிடலாம். ஆனால் அவற்றைச் செயல்படுத்த பல வாரங்கள், மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கும் என்கிறார் அவர்.

ஹமாஸின் இராணுவத்தை வலுவிழக்கச் செய்வது முதல் காஸாவின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றுவது வரை யிலான இராணுவத் திட்டங்கள் இஸ்ரே லிடம் உள்ளன. ஆனால், முந்தைய நெருக்கடிகளைச் சமாளித்த நீண்ட அனுபவம் உள்ளவர்கள், திட்டமிடல் இதுவரை தான் செல்லும் என்று கூறு கிறார்கள்.

இஸ்ரேலின் வெளிநாட்டு உளவுத்துறை யான மொசாட்டின் முன்னாள் மூத்த அதிகாரி ஹைம் டோமர், 'எங்கள் படை களை நாங்கள் வெளியேற்றிய மறுநாளே காஸாவுக்காக செயல்படுத்தக் கூடிய திட்டம் இருப்பதாக நான் நினைக்க வில்லை என்கிறார்.

## ஹமாஸ் தோற்கடிக்கப்பட முடியுமா?

ஹமாஸ் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் இஸ்ரேலியர்கள் அனைவரும் ஒருமனதாக உள்ளனர். அக்டோபர் 7ஆம் தேதி நடந்த படுகொலைகள் மிக வும் பயங்கரமானவை. இனியும் காஸா வில் ஆட்சி நடத்த இந்த அமைப்பை அனுமதிக்க முடியாது. ஆனால் மில்ஷ்டீ னின் கூற்றுப்படி, ஹமாஸ் ஒரு கருத்து, அதை இஸ்ரேலால் அழிக்க முடியாது.

இராக்கில் 2003ஆம் ஆண்டு, சதாம் உசேன் ஆட்சியின் அனைத்து தடயங் களையும் அகற்ற அமெரிக்க தலைமை யிலான படைகள் முயற்சி செய்தது ஒரு பேரழிவாக முடிந்தது, என்கிறார் அவர். இது பல லட்சம் இராக்கிய அரசு ஊழியர்களையும் ஆயுதப்படை உறுப் பினர்களையும் வேலையிழக்கச் செய்து, பேரழிவுகரமான ஒரு கிளர்ச்சிக்கு வித் திட்டது, என்கிறார்.

அந்த இராக் மோதலில் போரிட்ட அமெ ரிக்க வீரர்கள் தற்போது இஸ்ரேலில் உள்ளனர். அங்கு அவர்கள் தங்கள் அனுபவங்களைப் பற்றி இஸ்ரேலிய இராணுவத்துடன் பேசுகிறார்கள். 'இராக் கில் அவர்கள் பெரிய தவறுகளைச் செய்தார்கள் என்பதை இஸ்ரேலியர்களு க்கு விளக்குவார்கள் என்று நான் நம்பு கிறேன்,' என்கிறார் மில்ஷ்டீன்.

உதாரணமாக, ஆளும் கட்சியை ஒழிக்க வேண்டும் அல்லது மக்களின் மனதை மாற்ற வேண்டும் என்ற மாயையில் இருக்கக்கூடாது என்று அவர்கள் சொல்ல வேண்டும். அது நடக்கவே நடக்காது,' என்கிறார் அவர்.

## வரலாற்றுத் துயரம் திரும்புகிறதா?

பாலத்தீனிய தேசிய முன்முயற்சியின் தலைவர் முஸ்தபா பர்கௌதி கூறுகை யில், 'ஹமாஸ் மக்களிடம் பிரபலமான ஓர் அமைப்பாக உள்ளது. அவர்கள் ஹமாஸை அகற்ற விரும்பினால், அவர் கள் காஸாவில் ஒரு இன சுத்திகரிப்பை மேற்கொள்ள வேண்டும்,' என்றார்.

அதன்படி, பல லட்சம் பாலத்தீனியர்க ளை காஸா பகுதியிலிருந்து வெளி யேற்றி அண்டை நாடான எகிப்துக்குள் அனுப்ப இஸ்ரேல் ரகசியமாகத் திட்ட மிடுகிறது என்ற அச்சம் பாலத்தீன மக்களிடையே ஆழமாக வேரூன்றி வருகிறது.

இஸ்ரேல் நிறுவப்பட்ட போது, பெருமள விலான பாலத்தீனர்கள் அகதிகளாக ஆக்கப்பட்டார்கள். பலர் தப்பியோடினார் கள், அல்லது வீடுகளை விட்டு விரட்டி யடிக்கப்பட்டார்கள். தற்போது நடக்கும் நிகழ்வுகள் 1948இல் நடந்தவற்றின் வேதனையான நினைவுகளை தட்டி யெழுப்புகிறது.

பாலத்தீன விடுதலை அமைப்பின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் டயானா புட்டு கூறுகையில், நாட்டை விட்டு ஓடிப் போனால், திரும்பி வருவது சாத்தியமே இல்லை,' என்கிறார்.

## பாலஸ்தீன மக்களுக்கான பாதுகாப்பு என்ன?

இஸ்ரேலை சேர்ந்த அரசியல் நோக்கர் கள், முன்னாள் அதிகாரிகள் எனப் பலரும், பாலத்தீனர்கள் தற்காலிகமாக, எகிப்தின் சினாய் எல்லைக்கு அப்பால் தங்க வைக்கப்பட வேண்டியதன் அவ சியத்தை அடிக்கடி குறிப்பிடுகின்றனர்.

இஸ்ரேலின் தேசியப் பாதுகாப்பு கவுன்சி லின் முன்னாள் தலைவரான ஜியோரா ஈலாண்ட், ஏராளமான அப்பாவி பாலத் தீனர்களின் உயிருக்கு ஆபத்தை விளை விக்காமல், காஸாவில் தனது இராணுவ லட்சியத்தை அடைவதற்கு இஸ்ரேலு க்கு ஒரே வழி, பொதுமக்களை காஸா விலிருந்து காலி செய்ய வைப்பதே என்கிறார்.

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக அவர்கள் எகிப்து எல்லையைத் தாண்ட வேண்டும்,' என்று அவர் கூறுகிறார்.

காஸா மக்களுக்குப் பாதுகாப்பான வசிப் பிடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அடிக்கடி கூறப்படுகிறது

## காசா மக்களை எகிப்துக்கு அனுப்பத் திட்டமா?

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அமெ ரிக்க நாடாளுமன்றத்தில் அக்டோபர் 20ஆம் விடுத்த அறிக்கையில் இருந்த ஒரு வரி, பாலத்தீனர்களின் அச்சத்தை அதிகரித்துள்ளது. அதில் இஸ்ரேல் மற்றும் யுக்ரேனை ஆதரிப்பதற்கு நிதி யுதவியைக் கோரியிருந்தார்.



இந்த நெருக்கடி, மக்கள் எல்லை தாண்டிச் செல்ல நிர்பந்திக்கலாம். அது மனிதாபிமான சிக்கல்களை விளைவிக்க லாம்,' என்று கூறியிருந்தார். ஆனால், பாலத்தீனர்கள் எல்லையைக் கடக்க வேண்டும் என்று இஸ்ரேல் இதுவரை கூறவில்லை. இஸ்ரேலிய ராணுவம், பலமுறை, காஸாவின் குடிமக்களை தெற்கில் இருக்கும் 'பாதுகாப்பான பகுதிகளுக்கு' செல்லுமாறு கூறியுள்ளது. ஆனால் இந்தப் பகுதிகளின் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது குறிப் பிடத்தக்கது.

எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தாஹ் எல்-சிஸ்ஸி, காஸாவில் இஸ்ரேலின் போர் 'பொது மக்களை எகிப்துக்குள் தள்ளும் முயற்சி, என்று எச்சரித்துள்ளார். இந்தப் பிரச்னைகள் முடிந்தபின், காஸா பகுதியில் மக்கள் இருந்தால், அவர் களை ஆளப்போவது யார்? இது மில்லியன் டாலர் கேள்வி,' என்கிறார் மில்ஷ்டீன்.

## காஸாவில புதிய நிர்வாகம் அமைப்பது சாத்தியமாஃ

மில்ஷ்டீனின் கருத்துப்படி, காஸாவில் காஸா மக்களாலேயே நடத்தப்படும் நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்கிறார். இதற்கு உள்ளூர் தலைவர் களிடம் இருந்தும், அமெரிக்கா, எகிப்து, முடிந்தால் சௌதி அரேபியா வின் ஆதரவையும் பெறவேண்டும்.

கடந்த 2006ஆம் ஆண்டின் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு வருடத்திற்குப் பிறகு, காஸாவிலிருந்து ஹமாஸால் வன் முறையாக வெளியேற்றப்பட்ட பாலத்தீன அமைப்பான ஃபத்தாவின் தலைவர்களும் இதில் இருக்க வேண்டும், என்கிறார் அவர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லா நகரில் அமைந்துள்ள பாலத்தீனிய அதிகாரத்தை ஃபதா நிர்வ கிக்கிறது. ஆனால் பாலத்தீன அதிகார அமைப்பையும் அதன் வயதான தலை வர் மஹ்மூத் அப்பாஸையும் மேற்குக் கரையிலும் காசா பகுதியிலும் உள்ள பாலத்தீனர்கள் நம்பவில்லை.

பாலத்தீன அதிகார அமைப்பில் சில காலம் 1990களில் பணியாற்றிய மூத்த அரசியல்வாதியான ஹனான் அஷ்ராவி, இஸ்ரேல் உட்பட வெளியாட்கள் மீண் டும் பாலத்தீனர்களின் வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்துவது மோசமானது என்கிறார்.

'இதுவொரு சதுரங்கப் பலகை போன்ற தல்ல, சில காய்களை அங்கும் இங்கும் நகர்த்தி செக்மேட் வைப்பதற்கு. சில பாலத்தீனர்கள் இஸ்ரேலுக்கு ஒத்துழை ப்பவர்களாக இருக்கலாம். ஆனால் காஸா மக்கள் அவர்களை தயவுடன் ஏற்றுகொள்ள மாட்டார்கள்,' என்கிறார் அவர். 1948ஆம் மோதலின் துயர நினைவுகள் பாலத்தீனர்களுக்கு இன்னும் ஆறாமல் இருக்கின்றன, தற்போதைய சூழல் அதை இன்னும் தீவிரமாக்கி யிருக்கிறது.

காஸாவில் முந்தைய சிக்கல்களைக் கையாண்டவர்களுக்கு, எந்த தீர்வு முன் வைக்கப்பட்டாலும், அவை இதற்கு முன்பே சோதித்துப் பார்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

முன்னாள் மொசாட் அதிகாரியான ஹைம் டோமர், தன்னைப் பொறுத்த வரை, பணயக் கைதிகளை மீட்கும் வரை இராணுவ நடவடிக்கைகளை ஒரு மாதத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டும் என்கிறார். 2012இல் காஸாவில் நடந்த சண்டைக்குப் பிறகு, டோமர் மொசாட் இயக்குநருடன் ரகசிய பேச்சுவார்த்தை க்காகக் கெய்ரோவுக்குச் சென்றார். இதன் விளைவாக போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அவர்கள் இருந்த கட்டடத்திற்கு எதிர் கட்டடத்தில் ஹமாஸ் பிரதிநிதிகள் இருந்தனர், தெருவுக்குக் எகிப்திய அதி காரிகள் இரண்டு இடங்களுக்கும் இடையே சென்று வந்துகொண்டிருந்த னர். இதேபோன்ற ஒரு முன்னெடுப்பு மீண்டும் செய்யப்படவேண்டும் என்றும், இஸ்ரேல் நிச்சயமாக அதிக விலை கொடுக்க வேண்டும், என்றும் அவர் கூறுகிறார்.

'இஸ்ரேல் 2,000 ஹமாஸ் கைதிகளை விடுவித்தாலும் பரவாயில்லை. ஆனால் எங்கள் மக்கள் வீடு திரும்புவதை நான் பார்க்க விரும்புகிறேன்,' என்கிறார் அவர்.

அதன் பின், முழு அளவிலான இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்குவதா அல்லது நீண்ட கால போர்நிறுத்தத் தைத் தேர்ந்தெடுப்பதா என்பதை இஸ்ரேல் முடிவு செய்யலாம் என்று அவர் கூறுகிறார்.

ஆனால், இப்போது காலவரையின்றி காஸா பிரச்னையைச் சமாளிக்க இஸ் ரேலுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது என் கிறார் அவர். இது இஸ்ரேலின் தொண் டையில் சிக்கிய முள் போன்றது,' என்கிறார் அவர்.

நன்றி:- பிபிசி

# சம்பந்தரின் வரலாற்றுத் தவறுகள்?

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், அவரது இயலாமையை கருத்தில் கொண்டு பதவி விலகுவதே சரியானதென்று அண்மையில் தமிழரசு கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். தமிழரசு கட்சியை சேர்ந்த ஒருவர், பொதுவெளியில் இவ்வாறு கூறிருப்பது இது தான் முதல் தடவை. சுமந்திரனை அரசியலுக்கு கொண்டு வந்தவர் சம்பந்தன். அதே போன்று சி.வி.விக்கினேஸ்வரனை அரசியலுக்கு கொண்டு வந்தவரும் சம்பந்தன் தான்.

விக்கினேஸ்வரன் இடைநடுவில் சம்பந்தனிலிருந்து விலகி தனி வழியில், சென்றுவிட்டார். சுமந்திரன் இப்போது கூறும் விடயம் ஏற்கனவே பேசப்பட்ட விடயம் தான். சில மாதங்களுக்கு முன்னர், திருகோணமலையைச் சேர்ந்த குழுவொன்று தமிழரசு கட்சியின் மத்திய குழுவிடம், திருகோணமலை நிலைமைகள் தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாமையால் திருகோணமலையில் தாங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் முறையிட்டிருந்தனர். இதற்கு பின்னால் திருகோணமலை தமிழரசு கடசியின் ஒரு பிரிவினர் இயங்கியதாகவும் குற்றச் சாட்டுக்கள் உண்டு. திருகோணமலையை பொறுத்த வரையில், தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சிக்கு வெளியில் தான் இருக்கின்றனர். பழையவர்கள், புதியவர் என்றவாறு கட்சியில் பிளவுண்டு.



அவர்கள் மத்திய குழுவில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து அது தொடர்பில் சம்பந்தனுடன் கலந்துரையாடுவதற்கென குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு சம்பந்தனை சந்தித்து, கலந்துரையாடியிருந்தது. சம்பந்தன் பதவி விவகுவதற்கோ அல்லது, தனக்கு பதிலாக பிறிதொருவரை சிந்திக்கவோ தயாரில்மை என்னும் செய்தியுடன் குறித்த குழு வெளியேறியது.

தற்போது, சம்பந்தனின் பதவி விலகலை சுமந்திரன் பொது வெளியில் முன்வைத்திருக்கின்றார். சுமந்திரன் ஏன் இந்தக் கருத்தை இப்போது முன்வைத்தார் என்பதற்கு பதில் இல்லாவிட்டாலும் கூட, நிச்சயம், சுமந்திரனது கருத்துக்களால் சம்பந்தன் கடும் கோபமடைந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. சம்பந்தனை பொறுத்தவரையில் அவரது பதவி விடயத்தில் பிறிதொருவர் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. இருக்கும் வரையில் பதவியில் இருக்கவே அவர் விரும்புகின்றார்.

உண்மையில் சம்பந்தன் அவரது காலத்திலேயே அவரது வீழ்சியை பார்த்துக் கொண்டிருக்கின்றார். தமிழரசு கட்சியின் வரலாற்றில், தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மூத்த தலைவர் ஒருவரை பதவி விலகுமாறு கூறியிருப்பதும் இது தான் முதல் தடவை. தமிழரசு கட்சியின் மரபில், சக்கர நாற்காலியில் இருந்து அரசியல் கட்சியை வழி நடத்திய வரலாறுண்டு.

தமிழரசு கட்சியின் ஸ்தாபகத்தலைவர், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இறக்கும் வரையில் கட்சியின் பெருந் தலைவராகவே இருந்தார். மேடையில் பேச முடியாத நிலையிலிருந்த செல்வநாயகம் அமிர்தலிங்கத்தின் காதுகளுக்குள் ஏதோ



கூற, அதனை அமிர்தலிங்கம் சொல்வாராம். இதனை அவதானித்துக் கொண்டிந்த இளைஞர்கள் சிலர் இப்போது சில கட்சிகளின் தலைவர்களாக இருக்கின்றனர்.

அதே போன்று, தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் சிவசிதம்பரம், மரணப்படுக்கையில் இருக்கும் போது கூட, அவரது பதவியை கைவிடவில்லை. இந்த வரிசையில் சம்பந்தன் இருப்பதை ஒரு தவறாக தமிழரசு கட்சியால் கூற முடியாது.

சம்பந்தன் தமிழரசு கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்தாலும் கூட, ஏனையவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை சம்பந்தன் பெற்றிருக்கவில்லை. ஒரு வேளை அமிர்தலிங்கம் இருந்திருந்தால் சம்பந்தன் தமிழரசு கட்சியின் முதன்மையான தலைவராக வந்திருக்கவும் முடியாது. சம்பந்தனின் வயது, அனுபவம், ஒப்பீட்டடிப்படையில் சம்பந்தனோடு போட்டியிடக் கூடிய நிலையில் எவரும் இல்லாமை – இவ்வாறான காரணங்களால், சம்பந்தன் தமிழர் அரசியலை வழி நடத்தும் பெருந் தலைவரானார்.

2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, அனுபவமுள்ள, இராஜதந்திர தரப்புக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் சம்பந்தன் மட்டுமே இருந்தார். இதுதான் சம்பந்தனுக்கு மறுபுறம் வாய்ப்பாகவும் மாறியது. முதல் முதலாக கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர், ஒட்டு மொத்த தமிழ்தேசிய அரசியலையும் வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார். சம்பந்தனை தங்களின் தலைவராக ஏற்றுக் கொள்வதில் எவருக்குமே மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருத்திருக்கவில்லை. தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில், முதல் முறையாக, தமிழரசு கட்சியின் தலைவர் ஒருவரது தலைமையை முன்னாள் இயங்கங்கள் அனைத்துமே ஏற்றுக் கொண்டன. இவ்வாறானதொரு வாய்ப்பானது சம்பந்தனுக்கு முன்னர் இருந்த எந்தவொரு மிதவாத அரசியல்வாதிக்கும் கிடைத்திருக்காத ஒன்று. ஆனால் சம்பந்தன் இந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்.

தமிழரசு கட்சி தான் முதன்மையானதென்றும் சிறு பிள்ளைத்தனமான வாதத்திற்குள் சிக்குப்பட்டு, அனைவரையும் அரவணைத்தும் செல்லும் தலைமைத்துவமொன்றை வழங்கும் வரலாற்று வாய்ப்பை நழுவ விட்டார். சம்பந்தன் மட்டும் சரியாக நடந்திருந்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போது பலமானதொரு ஜனநாயக அமைப்பாக எழுச்சியுற்றிருக்கும்.

1977இல் ஆரம்பித்த சம்பந்தனின் அரசியல் பயணத்தில் சம்பந்தன், தவிர்க்க முடியாத ஒரு தமிழ் அரசியல்வாதி என்னும் நிலையை, 2009 இற்கு பின்னரான சூழலில்தான் பெற்றார். 1977இல் நேர்தவில் வெற்றி பெற்ற சம்பந்தன், அதன் பின்னர் 2001 தேர்தலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராகவே வெற்றி பெற்றார். 1994 பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த சம்பந்தன், பின்னர் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற, தங்கத்துரையின் படுகொலையை தொடர்ந்தே, அவரது வெற்றிடத்தை நிரப்பினார். இந்த பின்புலத்தில் நோக்கினால் 2009இற்கு பின்னரான காலம் குறிப்பாக விடுதலைப் புலிகள் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னரான காலப்பகுதி தான், சம்பந்தனது அரசியல் வாழ்வின் பொற்காலமாகும். ஆனால் இந்தக் காலத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதில் தான் சம்பந்தன் தவறிழைத்தார். சம்பந்தனின் அரசியல் தவறுகளை இரண்டு வகையில் நோக்கலாம்.

ஒன்று, ஒரு அரசியல் சுட்டமைப்பின் தலைவர் என்னும் வகையில், தனது காலத்தில் செய்ய வேண்டியதை செய்யாமல் தவறிழைத்தார். இண்டு, ஒரு மூத்த, அங்கீகாரமுள்ள அரசியல் தலைவராக, அரசியல் ரீதியில் செய்ய வேண்டியதை செய்யாமல் தவறிழைத்தார். ஒரு அரசியல் கூட்டணியின் தலைவராக சம்பந்தன் தனது கடமைகளை சரிவர செய்திருந்தால், இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு பலமான அரசியல் கூட்டணியாக இருந்திருக்கும். தலைமை தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

ஏனெனில் சம்பந்தனது தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வதற்கு எவருமே தயக்கம் காண்பிக்கவில்லை. ஆனால் தனது அசமந்தப் போக்குகளாலும் வீராப்பினாலும் தூரநோக்கற்ற அரசியல் புரிதல்களாலும் ஒரு வரலாற்று வாய்ப்பை சம்பந்தன் தவறவிட்டார்.

அடுத்தது, அரசியல் ரீதியான வரலாற்று தவறுகள். தீர்மானங்கள் எடுக்க வேண்டிய இடங்களில் இருப்பவர்கள், உரிய காலத்தில் தீர்மானங்களை எடுக்கத் தவறினால், அதன் பின்னர் என்ன நடக்குமென்பதற்கு முதல் உதாரணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், இரண்டாவது உதாரணம் சம்பந்தன். தாம் நிர்ணயித்துக் கொண்ட இலக்கு மட்டுமே முதன்மையானது, அதற்கு மாறான வாய்ப்புக்கள் அனைத்துமே தேவையற்றது என்னும் அரசியல் புரிதல் தான் விடுதலைப் புலிகளின் முடிவை தீர்மானித்தது. மக்கள் பெரும் அழிவுகளை எதிர் கொண்டனர்.

அதே போன்று வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது அதனை பயன்படுத்திக் கொள்ளா விட்டால், அதன் பின்னர் நிலைமை மேலும் மோசமடையும் என்பதற்கு சம்பந்தனது தவறான அணுகுமுறை ஒரு சிறந்த உதாரணம். 2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்னர், புதிய அரசியல் யாப்பிற்கு பதிலாக, அரசியலமைப்பில் இருக்கின்ற வாய்ப்புக்களை

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



உச்சமாகப் பயன்படுத்திக் கொளும் உபாயமொன்றை சிந்தித்திருந்தால், நிலைமைகளின் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும் .ஆனால் சம்பந்தன் புத்தி சாதுர்யமாக விடயங்களை கையாளத் தவறியதால், 13வது திருத்தச் சட்டத்தைக் கூட அமுல்படுத்த முடியுமா என்னும் கேள்வியுடன் தமிழர் எதிர் காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

இன்று சம்பந்தனை அவரது கட்சியை சேர்ந்தவர்களே வெளியேறுமாறு கூறுகின்றனர். சம்பந்தனை வெளியேறச் சொல்வதில் கவனிக்க வேண்டிய விடயமொன்றுண்டு. அதனை சொல்ல வேண்டியவர்கள் யார்? ஏனெனில் சுமந்திரன் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தார் அதாவது, சம்பந்தனது பதவி விலகல் தொடர்பில் அவரை அணுகிய போது, அவர் ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்றாராம்.


அதாவது, தனது நிலையை அறிந்து தான் திருகோணமலை தமிழ் மக்கள் தன்னை தெரிவு செய்திருக்கின்றனர். பின்னர் எதற்காக தான் பதவி விலக வேண்டும். இது தான் சம்பந்தனது நிலைப்பாடென்றால் அது சரியானது.

ஏனெனில், திருகோணமலை தமிழ் மக்களே அவரை தெரிவு செய்தனர். அந்த அடிப்படையில் அவரை பதவி விலகுமாறு அவர்கள் மட்டுமே கோர முடியும். சுமந்திரனோ அல்லது தமிழரசு கட்சியை சேர்ந்தவர்களோ, வேறு எவருமே அவ்வாறான கோரிக்கையை முன்வைக்க முடியாது. சம்பந்தனை போன்ற ஒருவரை தெரிவு செய்தால், அவரது நிலைமை இவ்வாறு தான் இருக்குமென்பதை முன்னரே மதிப்பிட்டே, அவரை ஆதரித்திருக்க வேண்டும்.

இப்போது சுடுகிறது மடி என்று கூறுவதில் அர்த்தமில்லை. ஆனால் ஒன்று, சம்பந்தன் அவரது காலத்திலேயே அவரது தவறுகளின் விளைவுகளுக்கு அவரே சாட்சியாக இருக்கின்றார். இந்த வாய்ப்பு ஏனைய அரசியல்வாதிகள், இயக்கங்களின் தலைவர்களுக்கு கிடைக்கவில்லை. அவரது கட்சியை சேர்ந்தவர்களே, அவரை பதவி விலகுமாறு கூறுவதானது, அவரைப் பொறுத்த வரையில் பெரும் இழுக்கும், தோல்வியுமாகும். இப்போது தான் எவருக்கும் தேவையில்லாத ஒருவராகி விட்டார் என்பதற்கு, சம்பந்தனே சாட்சியாகியிருக்கின்றார். இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமென்பதை, சம்பந்தன் ஒரு போதுமே, எண்ணியிருந்திருக்க மாட்டார்.

# கடிவாளம் போடும் அமெரிக்கா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கடந்த 25ஆம் திகதி காலை சீனாவின் சர்ச்சைக்குரிய ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் ஒரு சந்திப்பை நடத்தியிருந்தார் அமெரிக்க தூதுவர் ஜீலி சங்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு அவரே சமூக ஊடகத்தில் இட்டிருந்த பதிவில், மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிடம், தாம் வலியுறுத்திய முக்கிய விடயங்கள் குறித்து சுட்டிக் காட்டியிருந்தார்.

முதலாவது, கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் பங்கேற்கும் அனைவரும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். இரண்டாவது, கடன் வழங்குநர்கள் அனைவரும் சமமாகவும், நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும். மூன்றாவது கடன் மறுசீரமைப்பு செயற்பாடு நியாயமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் சீனாவுக்கு ஐந்து நாட்கள் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன், மத்திய வங்கி ஆளுநரும் பெய்ஜிங் சென்றிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க நடத்திய சந்திப்புகள் பேச்சுக்களில் பெரும்பாலானவற்றில் அவரும் பங்கெடுத்திருந்தார்.

ஏனென்றால், ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணம் பெரும்பாலும் பொருளாதார ரீதியான உதவிகள், ஒத்துழைப்புகள், நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதுடனேயே தொடர்புபட்டிருந்தது. அதைவிட சீன கடன் வழங்குநர்களுடனான பேச்சுக்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடுகளுடனும், அவர் தொடர்புபட்டிருந்தார். இவ்வாறான நிலையில் தான், அமெரிக்க தூதுவர் மத்திய வங்கி ஆளுநரைச் சந்தித்திருக்கிறார். இந்தச் சந்திப்பில் அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியிருக்கின்ற விடயங்கள், சீனா விடயத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் திருப்தியின்மை காணப்படுவதை புலப்படுத்துகிறது.

இழுபறிகளுக்குப் பின்னர், இலங்கைக்கு இரண்டாவது தவணை கடன் கொடுப்பனவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியிருக்கிறது.

பணியாளர் மட்ட இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதால், அடுத்த கட்டத்துக்குள் நகர வேண்டிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது.

இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்திருந்த போதும், சீனாவே முரண்பட்டு வந்தது. ஏனைய நாடுகளுடன் சேர்ந்து கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டுக்கு வர மறுத்தது.

தனியாக இலங்கையுடன் பேச்சு நடத்தி இணக்கத்தை ஏற்படுத்துவோம் என்று கூறியது. அது போலவே தற்போது இலங்கையுடன் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை எட்டியிருப்பதாக சீனா கூறுகிறது. ஆனாலும் ,அந்த இணக்கப்பாடு என்ன என்பது இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

முன்னதாக சீனாவின் எக்சிம் வங்கி, இலங்கைக்கு வழங்கிய கடன்களை மீளவசூ லிப்பதற்கான காலஎல்லையை மிக குறுகிய காலத்துக்கே நீடிப்புச் செய்தது. அதற்கு அமெரிக்கா போன்ற நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டன. இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகள், 10, வருடங்களுக்கு மேல், கடன்களை மீளச் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க தயாராக உள்ளன.

ஆனால், சீனாவோ அந்தக் கால எல்லையை இரண்டு வருடங்களுக்கு மேல் நீடிப்பதற்கு தயாராக இல்லை. இதுவரை அதிகபட்சமாக இரண்டு வருடகால அவகாசத்தையே வழங்கியிருக்கிறது.

தற்போது மேலதிக கால அவகாசத்தை கொடுக்க சீனா இணங்கியிருக்கிறதா என்ற கேள்விக்கு அரசாங்கத்திடம் இருந்தோ, சீனத் தரப்பில் இருந்தோ பதில் இல்லை. சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு



உடன்பாடு காணப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும், அது என்ன என்பதை மட்டும் வெளியிடாமல் இருக்கிறது.

ஏற்கெனவே சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு கண்ட உடன்பாட்டையும் கூட அரசாங்கம் பகிரங்கப்படுத்தவில்லை.

இவ்வாறான நிலையில் தான், கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் பங்கேற்கும் அனைவரும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்று அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியிருக்கிறார். அவர் இலங்கைக்கு மட்டுமல்ல சீனாவுக்கும் சேர்த்தே அழுத்தம் கொடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சீனாவுடன் இரகசியமான இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதை அமெரிக்கா எதிர்க்கிறது. சீனாவின் ஷி யான் 6 என்ற ஆய்வுக் கப்பலுக்கு அரசாங்கம் அனுமதி மறுத்து வந்த நிலையில் திடீரென கடந்த புதன்கிழமை அது கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

அமெரிக்கா, இந்தியாவின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் இந்த அனுமதியை வழங்கிய பின்னர் தான், அமெரிக்கத் தூதுவரின் இந்தக் கருத்து வெளியானது.

அதாவது, சீனா தனது பாதுகாப்பு நலன்களை கருத்தில் கொண்டு, இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்கிறதா, கடன் மறுசீரமைப்பை காரணம் காட்டி தனது பாதுகாப்பு நலன்களை அடைவதற்கு முற்படுகிறதா என்ற சந்தேகங்கள் அமெரிக்காவிடம் இருப்பதை தான் ஜீலி சங்கின் இந்த கருத்து உணர்த்தி நிற்கிறது.

இரகசியமான கடன் மறுசீரமைப்பு உடன்பாடு, இலங்கைக்கும் தமக்கும் பாதகமானதாக அமையும் அமெரிக்கா கருதுகிறது.

அதனால் தான், கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் கடன் வழங்குநர்கள் அனைவரும் சமமாகவும், நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியிருக்கிறார்.

சீனா தவிர்ந்த பிறநாடுகள் இலங்கைக்கு வழங்கிய கடன்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு கூடுதல் காலஅவகாசத்தை அளிக்கும் நிலையில், சீனா மட்டும் அந்தக் கடன்களை குறுகிய காலத்தில் மீளப் பெற்றுக் கொள்வது என்பது தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியாக இருக்கும் என்று மேற்குலகம் கருதுகிறது.

சீனாவுக்கு வழங்கப்படுவதை போன்று சலுகைகளை மேற்குலகம் எதிர்பார்க்கவில்லை. தாங்கள் வழங்க முன்வரும் சலுகைகளைப் போலவே, சீனாவும் வழங்க முன்வர வேண்டும் என்று தான் அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நிலைப்பாடு சாதகமானதாகவே இருந்தாலும், சீனா அதற்கு இணங்க வேண்டுமே. சீனா குறுகிய கால கடன் மறுசீரமைப்புக்கு இணங்கி வந்தால் கூட பரவாயில்லை என்ற மனோநிலையில் தான் அரசாங்கம் இருக்கிறது.அதனால் தான் இப்போது எட்டப்பட்டதாக கூறப்படும் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை பெரிய விடயமாக முன்னிறுத்துகிறது.ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகளோ, தாங்கள் நியாயமற்ற வகையில் நடத்தப் படுவதாக கருதும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் தான் நியாயமான முறையில் கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநரிடம் அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியிருக்கி றார்.

அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் கோட்டாபய ராஜபக் ஷவின் அரசாங்கத்தின் காலத்தில் கொழும்பில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார். அவரது செயற்பாடுகளும், அறிக்கைகளும், அரச தரப்புக்கு பல சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளை கொடுத்திருக்கிறது. அரகலய போராட்ட காலத்தில், அவர் வெளியிட்ட அறிக்கைகளை காரணம் காட்டி, அவர் உள்நாட்டு விவகாரங்களில் இனிமேல் தலையீடு செய்யக் கூடாது என்று கண்டிக்க வேண்டும் என றியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் தலைமையிலான தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வைக் குழு அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்திருக்கிறது.

அதேவேளை கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அமெரிக்க தூதுவர் சீனாவுடன் காட்டுகின்ற இறுக்கம் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் போலத் தெரியவில்லை. சீன ஆய்வுக் கப்பல் விவகாரத்திலும் அமெரிக்க தூதுவர் அழுத்தங்களைக் கொடுத்து வந்தார்.

ஆக, அரசாங்கத்துக்கு தலைவலி கொடுப்பவராக ஜீலி சங் மாறியிருக்கிறார். 2009இற்குப் பின்னர் கொழும்பில் பதவி வகித்த அமெரிக்க தூதுவர்களில் அதுல் கெசாப் தவிர ஏனைய நான்கு பேரும் பெண்கள். அவர்களில், அலெய்னா ரெப்லிட்ஸ் தவிர, ஏனையவர்களான பற்றீசியா புரெனிஸ், மிச்சேல் ஜே சிசன், ஜஜீலி சங் ஆகிய மூவரும் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பவர்களாகவே கருதப்பட்டிருக்கின்றனர்.

சீனா கடன் வழங்குநர் என்ற நிலையில் இருந்து இலங்கையை தன் பக்கம் இழுப்பதற்கு முற்படுகிறது.

ஆனாலும் கடன் மறுசீரமைப்பை பிராந்திய பாதுகாப்பு மற்றும் அரசியலில் சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கான கருவியாகப் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா அவ்வளவு இலகுவாக இடமளிக்காது என்பதையே ஜீலி சங்கின் கருத்து உணர்த்துகிறது.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அமெரிக்க -சீனா உபாயத்திற்குள் இலங்கைத்தீவின் அரசியல்!

இலங்கையின் சுதந்திரமானது இறைமையினால் கட்டமைக்கப்படுவதென்பதற்கு மாறாகவே அரசறிவியல் கற்கை உணர்த்துகிறது. இக்கருத்து நிலை உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் பொருந்துமாக இருந்தாலும் சந்தையும் வர்த்தகமும் அத்தகைய இறைமையை பலவீனமானதாக மாற்றியுள்ளதாகவே தெரிகிறது.

இத்தகைய எண்ணக் கரு ஏனைய நாடுகளை விட இலங்கைக்கு அதிகம் பொருந்துவதாகவே உள்ளது. காரணம் இலங்கைத்தீவின் அமைவிடமும் எதிர்நோக்கும் அரசியல் பொருளாதார நெருக்கடியும் அத்தகைய நிலையை தீவிரப்படுத்தி வருகிறது.

குறிப்பாக இலங்கைத் தீவு வல்லரசுகளால் ஆளப்படும் தீவாக விளங்குகிறது. இலங்கைத்தீவு சுதந்திரமாக (Freedom) சுதேசிகளால் ஆளப்படுவதைக் காட்டிலும் எதிர்நோக்கும் நெருக்கடியிலிருந்து வெற்றிகரமாக விடுதலை (Liberty) பெறுவதையே ஆட்சியாளர்கள் ஆளுதல் எனக்கருதுமளவுக்கு நிலமை காணப்படுகிறது.

இக்கட்டுரையும் தென் இலங்கை ஆட்சியாளர்கள் அமெரிக்க-சீனா அதிகாரத் தலையீட்டை அனுசரித்து ஆட்சி செய்யும் போக்கை தேடுவதாக அமையவுள்ளது. முதலாவது. இலங்கைப் பாராளுமன்ற தேசிய பாதுகாப்பு கண்காணிப்புக் குழு இலங்கையின் உள்விவகாரங்களில் கருத்துக்களை வெளியிடுவதையும் தலையீடு செய்வதையும் தவிர்க்குமாறு அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கு பரிந்துரை செய்துள்ளது. பாராளுமன்றத்தில் பாதுகாப்புச் செயலாளர். முப்படைத்தளபதிகள்.



பொலிஸ்மா அதிபர் மற்றும் ஏனைய அரச உயர் அதிகாரிகள் ஒன்று கூடி இத்தகைய தீர்மானம் எடுத்துள்ளதுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவித்துள்ளனர்.

இதில் ஆளும் கட்சியினர் மட்டுமன்றி எதிர் தரப்புக்கள் கலந்து கொண்டுள்ளதுடன் தீவிர அமெரிக்க எதிர்ப்பு வாதத்தை முன் வைத்துள்ளனர். அது மட்டுமன்றி மே 2022 அமெரிக்கத் தூதுவர் முன் வைத்த கருத்துக்களுக்கும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவது. சீனா இலங்கைத் தீவை இராணுவ தளமாக விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்காவின் இராணுவ மையமான பென்டகன் தனது வருடாந்த பாதுகாப்பு அறிக்கையொன்றின் தெரிவித்துள்ளது. சீனா தனது இராணுவத்தளங்களை விஸ்தரிப்பது தொடர்பில் 18 நாடுகளை தெரிவு செய்துள்ளதாகவும் அதில் இலங்கை முதன்மையானதாக அமையவுள்ளதாகவும் வெளிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் 2023 ஆரம்பத்திலும் அமெரிக்கா எச்சரிக்கை செய்திருந்தது. மேலும் அவ்வறிக்கையில் இராணுவ நடவடிக்கையின் தேவை எழும் போது சீன இராணுவம் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தளங்களை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்துகிறது. இதில் தென்னாசிய நாடுகளில் இலங்கை. வங்களாதேஷ். பாகிஸ்த்தான் மற்றும் மியான்மார் முக்கியமானவையாக உள்ளதாவும் தென் கிழக்காசிய நாடுகளில் தாய்லாந்து.



சிங்கப்பூர். மற்றும் ந்தோனேசியா முக்கியமான நாடுகளென்றும் பென்டகன் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. தொலைதூரத்தில் சீனா தனது இராணுவ வவலிமையை வெளிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் வெளிநாடுகளில் இராணுவ உட்கட்டமைப்புகளை மற்றும் வினியோக வசதிகளை விஸ்தரிக்க தொடங்கியுள்ளது. சீனாவின் இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை குழப்புவதாகவே அமையுமென அவ்வறிக்கையில் பென்டகன் எச்சரித்துள்ளது.

மூன்றாவது பென்டகனின் அறிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் சீனா தனது விமானம் தாங்கி கப்பல் உட்பட ஆறு கப்பல்களை ஏடன் துறைமுகம் நோக்கி 26.10.2023 இல் நகர்த்தியுள்ளது. ஹமாஸ்-இஸ்ரேலியப் போர் தீவிரமான நிலையை அடையும் தறுவாயில் அமெரிக்க - சீனப் போர்க்கப்பல்கள் மேற்காசியாவை நோக்கி நகர்வதென்பது பிராந்திய அதிகாரச் சமநிலையை நோக்கியதாக கருதினாலும் சீனாவின் இராணுவ விஸ்தரிப்பு நகர்வாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இது அமெரிக்காவின் இஸ்ரேலிய ஹமாஸ் மீதான போருக்கு ஆதரவானதாக அமையும் போது சீனாவின் நடவடிக்கை இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைக்கு மட்டுமன்றி அமெரிக்காவுக்கு எச்சரிக்கையானதாகவே தெரிகிறது. ஏற்கனவே சீனாவின் இராணுவத் தளமாக டிஜிபூ ட்டியில் (Djibouti) 2016ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவது தெரிந்தவிடயமே. கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள டிஜிபூட்டியானது இந்துசமுத்திர நாடு என்பதுடன் இந்து சமுத்திரத்தின் கேந்திரப் பகுதியை அண்மித்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமன்றி சீனாவின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட துறைமுகங்களில் சிலவற்றை சீனா 99 வருட குத்தகைக்கு பெற்று வருகிறது. அவை அனைத்துமே சீனாவின் இராணுவத் தளங்களாக மாறுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது என்ற விவாதம் 2012 ஆண்டு முதல் முன்வைக்கப்பட்டு வருகிறது. வோசிங்டன். புதுடில்லி மற்றும் ஈழத்தமிழர் சார்ந்து ஆய்வுகளும் வெளியீடுகளும் அதிகம் வெளிவந்துள்ளது. இத்தகைய நிலையிலேயே .லங்கைப் பராளுமன்றத்தின் தேசிய பாதுகாப்புக் குழுவின் அமெரிக்கத் தூதுவருக்கு எதிரான எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

கடந்தவாரம் இப்பகுதியில் ஜனாதிபதி ரணில்விக்கிரசிங்ஹாவின் அமெரிக்கா மற்றும் மேற்குக்கு எதிரான நடவடிக்கைகளையும் அதன் உள்நோக்கத்தையும் வெளிக் கொணர்ந்திருந்தது. தற்போது மீளவும் அதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் தேசியபாதுகாப்புக் குழுவின் எச்சரிக்கை அமைந்துள்ளது. அதே நேரம் அக்குழுவின் உறுப்பினராக உள்ளவர்கள் பலர் அரகளையவின் புரட்சி(?) நிகழும் போது அமெரிக்க தூதுவரின் கட்டுப்பாட்டில் இருந்ததுடன் முன்னாள் ஜனாதிபதியின் தொலைபேசி அழைப்பை அசட்டை செய்திருந்ததாக செய்திகள் வெளியாகி

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து**
**பேராசிரியர்**
**– K.T.கணேசலிங்கம் –**



யிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. குறிப்பாக இலங்கையின் அப்போதைய முப்படைத் தளபதி முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிக்காது அமெரிக்க தூதுவருடன் உரையாடியதாக பகிரங்கமாக தெரிய வந்திருந்தது. அத்தகைய இராணுவமும் அதன் படைத்தளபதிகளும் தற்போது தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் ஏன் அமெரிக்க தூதுவருக்கு எதிராக எச்சரிக்கை செய்துள்ளது என்ற கேள்வி நியாயமானதாகவே தென்படுகிறது. அதற்கான பதிலைத் தேடுவது அவசியமானது. பிரதானமாக இலங்கைத்தீவின் அரசியல் சீன-அமெரிக்க பொறிக்குள்ளே அகப்பட்டுள்ளது. தென் இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவிடமிருந்து விடுதலை பெறுவதற்கு சீன-அமெரிக்காவிடம் சுதந்திரத்தை இழந்து வருகின்றனர். அவர்கள் எத்தகைய சுதந்திரத்தை இழந்தாலும் இந்தியாவையும் ஈழத்தமிழரையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றே தெரிகிறது. இந்தியா பாரியளவான பொருளாதார. இராணுவ மற்றும் புலனாய்வுத் தகவல்களை போரின் போதும் அதன் பின்னரும் வழங்கிவரும் நிலையில் தென் இலங்கை சீன-அமெரிக்க நெருக்கத்தையே அதிகம் கொண்டு செயல்படமுனைகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க நட்புடன் செயல்பட ராஜபக்ஷக்கள் சீன சார்ப்பில் செயல்பட உள்நாட்டில் (22ம் பக்கம் பார்க்க)



# காயம் அடைந்தவர்கள், வெளிநாட்டவர்கள் வெளியேற காசா எல்லை திறக்கப்பட்டது!

ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் காசா மீது அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் காசா பகுதி சீர்குலைந்துள்ளது. ஹமாஸ் பயங்கர வாதிகளின் நிலைகளை குறி வைத்து இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.



இதில் கட்டடங்கள் மிகப்பெரிய அளவில் சேதம் அடைந்துள்ளன. சில ஏவுகணை கள் தவறுதலாக குடியிருப்புகள் மீது விழுந்து விபத்து, வெடிகுண்டு தாக்கு தலால் தீப்பிடித்து எரியும் கட்டடங்கள், முகாம் மீது தாக்குதல் போன்றவற்றால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ள னர்.

மேலும், ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர் களுக்கு சிகிச்சை அளிக்க போதுமான வசதி கிடைக்காத நிலை ஏற்படுகிறது. கடந்த 25 நாட்களாக தொய்வின்றி இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால பலத்த காயம் அடைந்தவர்கள், வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் காசாவில் இருந்து வெளியேற முடியாத நிலை ஏற்படடது. இந்த நிலையில் நேற்று காசா எல்லை திறக்கப்பட்டது.

இரட்டை குடியுரிமை , வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருக்கும் நூற்றுக் கணக்கானோர் மற்றும் பலத்த காயம் அடைந்தோர், எல்லை வழியாக வெளி யேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால், எதிர்வரும் நாட்களில் எவ்வளவு பேர் அனுமதிக்கப்படுவார்கள் என்பது குறித்து முழு விவரம் தெரிவிக்கப்பட வில்லை.

இருந்த போதிலும், போருக்கு மத்தியில் இது முக்கியமானதாக பார்க்கப்படு கிறது. காசா மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், வடக்கு காசாவில் இருந்து பொதுமக்கள் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி வந்தது. ஆனால், காசாவில் இருந்து பாலஸ்தீனர் கள் வெளியேற மறுப்பு தெரிவித்தனர். காசாவில் சுமார் 23 இலட்சம் பேர் வசித்து வருகிறார்கள். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் வீடுகளில் இரு ந்து வெளியேறி முகாம்களில் வசித்து வருகிறார்கள்.

## இஸ்ரேல் அழிக்கப்படும்

இஸ்ரேல் என்ற நாடு அழிக்கப்படும் வரை ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப் பட்ட தாக்குதல்கள் போன்ற தாக்குதல் கள் தொடரும் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. லெபனான் செய்தி நிறுவனமான எல்பிசிஜ யிடம் ஹமாஸ் அமைப்பின் முக்கிய அதிகாரியான காசி ஹமாட் அளித்த நேர்காணலில் மேற் கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், எங்கள் நிலத் தில் இஸ்ரேலுக்கு இடமில்லை. எனவே நாங்கள் அந்த நாட்டை அகற்ற வேண்டும். இஸ்ரேல் அழிக்கப்படும் வரை ஒக்டோபர் 7 தாக்குதலை மீண் டும் மீண்டும் செய்வோம். நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள்,நாங்கள் செய்யும் அனைத்தும் நியாயமானது என மேலும் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல் தொடர்பில் இஸ்லாமிய நாடுகளுக்கு அழைப்பு!

இஸ்ரேலுடனான வர்த்தக உறவை துண்டிக்க இஸ்லாமிய நாடுகளுக்கு ஈரான் நாட்டின் உயர் தலைவரான அயதுல்லா அலி கமேனி வலியுறுத்தியுள் ளார்.

எண்ணெய் ஏற்றுமதி உட்பட இஸ்ரேலு டனான வர்த்தகத்தை துண்டிக்குமாறு அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள் ளார். காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல் காரணமாக ஈரான் தரப் பில் இருந்து இவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஹமாஸ் அமைப்பின் ஊடக பேச்சாளர் அபு உபைடா வெளி யிட்ட காணொளியில் எதிர்வரும் நாட் களில் பல வெளி நாட்டு பணயக் கைதி களை விடுவிக்க உள்ளோம் என தெரி வித்துள்ளார்.



இந்நிலையில் வெளிநாட்டு பணய கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார் கள் என்ற ஹமாஸ் போராளிகள் அறிவிப்பைத் தொடர்ந்து கடவுச்சீட்டு வைத்திருக்கும் வெளிநாட்டு மக்கள், எகிப்து நாட்டிற்கு ரபா வழியாக கூட்டம் கூட்டமாக வெளியேறி வரு கின்றனர்.

சமீபத்தில் அமெ ரிக்கா, இஸ்ரேலை சேர்ந்த 4 பெண் பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப் பினர் விடுவித்தனர். இந்நிலையில் ,வெளிநாட்டு பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் போராளி கள் முடிவு செய்துள்ளனர்.






வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# நீர்த்துப் போகும் நீதிப் போராட்டம்

அரசியல் கட்சிகள், புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர்கள் ஆகியவற்றின் தலையீடுகளால் பிளவடைந்து போயிருந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்புக்கள் தற்போது புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர்களின் பணத்துக்காகவும், பதவி நிலைகளுக்காகவும் கைகலப்பில் ஈடுபட்டு கைது செய்யப்படுமளவிற்கு மூன்றாந்தர நிலையை அடைந்துள்ளன''

இலங்கை அரசாங்கத்துக்கு தலையிடியாக காணப்படும் 'அதியுயர் உணர்வு' ரீதியான விடயமாகக் காணப்படும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், உள்ளக முரண்பாடுகளால் தானாகவே நீர்த்துப் போகும் நிலையை அடைந்திருக்கின்றமை தமிழினத்துக்கே துரதிஷ்டம்

இலங்கையில் நடந்தேறிய மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான நிகழ்வுகளுக்கு சாட்சியங்களாக இருப்பவை வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் தான்.

தமிழின விடுதலைப் போராட்டத்தில் 'அதியுயர் உணர்வு' ரீதியான விடயமாக இருப்பதும் இன அழிப்புக்கான சான்றாதாரமாக கொள்ளப்படுவதும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களின் நீதிப் போராட்டம் தான்.

உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்ததன் பின்னரும் சர்வதேச நாடுகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அதீதமாக கரிசனைகளைக் காண்பிக்கும், செவிமடுக்கும் மிக முக்கியமான விடயமாக இருப்பதும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் நியாயமான கோரிக்கை தான்.

அரசாங்கத்துக்கும், அரச படைகளுக்கும் கையாள முடியாத பெருந்தலைவலியான விடயமாக இருப்பதும் அற்பசொற்பங்களுக்கு விலைபோகாது, தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டுமென்ற வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களின் உறுதியான நிலைப்பாடு தான்.

அரசியல்கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் நீதிகோரி, நியாயம் கேட்டு முன்னெடுத்த அனைத்து முயற்சிகளும் முட்டுச் சந்துக்குள் வந்து நிற்கின்றபோதும், இனவிடுதலையின் அவசியத்தை உள்நட்டிலும், வெளிநாட்டிலும் வலுவாக உணர்த்தி நிற்பது 128வரையிலான மூத்தவர்களின் நிரந்த விடைகொடுப்பின் பின்னரும் சளைக்காது முன்னெடுக்கப்படுவது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களின் நீதிக்கான தொடர் போராட்டங்கள் தான்.

இத்துணை பெருமதிப்புமிக்கதும், ஒட்டுமொத்த தமிழர்களின் விடுதலைக்காக தற்போதுள்ள மிகப்பெரும் ஆயுதமாக இருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், அவர்களது உறவினர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பின் தொடர்ச்சியான மூன்றாந்தரச் செயற்பாடுகளால் சந்திசிரிக்கும் நிலைக்கு வந்துள்ளது.

அதுமட்டுமன்றி வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களது உறவுகளின் அமைப்புக்களுக்குள் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பணத்தாலும், பதவி நிலைகளுக்காகவும் ஏற்பட்டுள்ள, உள்ளக முரண்பாடுகளால் தானாகவே நீர்த்துப் போகும் நிலையை அடைந்திருக்கின்றது.

குறிப்பாக, வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் வவுனியா மாவட்ட நிர்வாகத் தெரிவின்போது உறவுகளுக்குள் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் கூர்ப்படைந்து கைகலப்பாகியது.

இந்த நிலைமையால், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி, செயலாளர் ஆனந்தன் நடராஜா லீலாதேவி, வவுனியா மாவட்டத் தலைவி சிவாநந்தன் ஜெனிற்றா முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சபிதா ராஸ்திரி, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான சண்முகராசா சறோஜினிதேவி, செல்லத்துரை கமலா, பேரின்பராசா பாலேஸ்வரி ஆகியோர் கைது பொலிஸாரால் செய்யப்பட்டனர்.

அது மட்டுமன்றி தமது போராட்டங்களின் சத்துருக்களாக காண்பித்து வந்த பொலிஸாரிடமே நீதி, நியாயம் கேட்டு சரணடைய வேண்டிய நிலைமைக்கு உறவுகள் தள்ளப்பட்டுள்ளமையானது அவர்களின் உள்நாட்டு நீதித்துறை, சட்டம் ஒழுங்கு மீதான நம்பிக்கையில்லை சர்வதேச விசாரணையே தேவை என்ற அடிப்படைக் கோரிக்கையையே ஆட்டம் கண்டுள்ளது.

இதனால், வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களது விடயம், நிரந்தரமாக உள்நாட்டு, வெளிநாட்டு அரங்கிலிருந்து காணாமலாக்கப்பட்ட வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தினதும், அரசபடைகளினதும், இன்னொரன்ன சக்திகளினதும் எதிர்பார்ப்பு யதார்த்தமாக நிறைவேறும் நிலையை அண்மித்திருக்கின்றது.

இந்த நிலைமை எவ்வாறு ஏற்பட்டதென்பதை உணர்வதற்கு சற்றே பின்நோக்கிய பார்வை தேவையாகவுள்ளது. போரின் முடிவுற்றதன் பின்னர் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி இலங்கை அரசாங்கத்தின் கிடுக்குப்பிடியான காலத்தில் வவுனியாவில் உறவுகள் முதற்தடவையாக ஒன்றுகூடியிருந்தன.

அந்த ஒன்றுகூடல், நீதிக்காக, நியாயதுக்காக தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான உணர்வு ரீதியானதாக இருந்தது. அதற்குள் எந்தவொரு நிகழ்ச்சி நிரலும் இருந்திருக்கவில்லை. இந்த நிலைமையானது, 2013ஆம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களினது உறவுகள் பெரும் திரட்சியாக ஒன்று கூடி தமது நீதிக்கோரிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். அதுவே இறுதியாகவும் இருந்தது. அதன்பின்னரான காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகளை கையாள ஆரம்பித்தன. இதனால் உறவுகளுக்குள் அணிகள் தோற்றம் பெற்றன. அந்த அணிகள் அரசியல் கட்சிகளின் பால் அணிவகுத்து நின்றமையால் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்கள் தோறும் இரண்டு, மூன்றாக பிளவுபடும் நிலைமைகள் தோன்றின.

தொடர்ந்த காலத்தில் அரசியல்கட்சிகள் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது அமைப்புக்களை கையாள்வதை கைவிடவும், சில காலம் சிவில் அமைப்புக்கள் தங்களது நிகழ்ச்சி நிரலுக்காக பயன்படுத்தியிருந்தன.

அந்த நிலைமையும் நீடித்திருக்கால நிலையில் புலம்பெயர் தரப்புக்களும் தனிநபர்களும் வலிந்து காணாமலாக்கப்பட்ட அமைப்புக்களை கையாள ஆரம்பித்தன. இதன்காரணமாக, 2017ஆம் ஆண்டு 'வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம்' தோற்றம் பெற்றது. எனினும் வவுனியாவில் தொடர்ச்சியாக போராட்டத்தினை முன்னெடுத்த வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களது உறவினர்களின் அணியொன்று தனித்து நின்றது.

அந்த அணி, வடக்கு,கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதில் தீட்டுப் பார்த்தது. அந்த நிலைமைக்கு கூட அந்த அணியைக் கையாளும் தனிநபர்களுக்கு உரிய பதவி நிலைகள் கிடைக்காது என்பதும், புலம்பெயர் தேசத்திலிருந்து கிடைக்கும் பணஉதவி நேரடியாக கிடைக்காது என்பதும் தான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது.

அவ்வாறான நிலையில் காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்களின் பெரும்பான்மைப் பங்கேற்புடன் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியாக யோகராசா கனகரஞ்சினியும் செயலாளர் ஆனந்தன் நடராஜா லீலாதேவியும் நியமிக்கப்பட்டனர். அங்கே வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை, உறுப்பினர்களின் விருப்பு வெறுப்பு கோரப்படவில்லை.

வெறுமனே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின், விடயங்களை கையாளும் போது உள்நாட்டு, வெளிநாட்டு சர்வதேச தரப்புக்களையும் கையாள வேண்டிய நிலைமைகள் இருப்பதன் காரணமாக, அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் அதற்குப் பொருத்தமானவர்கள் என்ற அடிப்படையில் தான் அந்த நியமனங்கள் கூட வழங்கப்பட்டன. அதன் பின்னர் வடக்கு, கிழக்கை மையப்படுத்தி மாவட்டச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கு சிவபாதம் இளங்கோதையும், கிளிநொச்சிக்கு கோகிலவாணி கதிர்காமநாதனும், மன்னாருக்க மனுவேல் உதயச்சந்திராவும், வவுனியாவுக்கு சிவானந்தன் ஜெனிற்றாவும், முல்லைத்தீவுக்கு மரியசுரேஸ் ஈஸ்வரியும், மட்டக்களப்புக்கு அமல்ராஜ் அமலநாயகியும், அம்பாறைக்கு செல்வராணி தம்பிராாசாவும், திருகோணமலைக்கு பஸ்டியன் தேவியும் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.


இதனையடுத்து வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவர், செயலாளரும், வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டச் சங்கங்களின் தலைவர்களும், புலம்பெயர் தேசத்திலிருந்து பண உதவி வழங்கும் அமைப்பினரும், தனிநபர்களும் கூட்டிணைந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களே நடைமுறைப்படுத்தப்பட்டன.

போராட்டங்களாக இருந்தாலும் சரி, மகஜர்களாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தின் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட முன்மொழிவுகளாக இருந்தாலும் சரி, இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்களாக இருந்தாலும் சரி, ஊடக அறிக்கைகளாக இருந்தாலும் சரி மேற்படி தரப்பினரே தீர்மானிக்கும் சக்திகளாக இருந்தனர். ஒன்றுக்கு மேற்பட்ட உறவுகளை தொலைத்து விட்டு நீதிக்காக ஏங்குகின்றன அப்பாவி தாய், தந்தையர்களும், ஏனைய உறவுகளும் அந்த தீர்மானங்களை அப்படியே ஏற்றுக் கொள்பவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு தங்களை ஆட்டுவிப்பவர்கள் யார் என்பதைக் கூட அறியும் அளவிற்கு ஆற்றல்கள் இருந்திருக்கவில்லை.


இவ்வாறான நிலையில் செயற்பட்டு வந்த வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துக்குள் கடந்த டிசம்பரில் இருந்து முரண்பாடுகள் வலுத்தன. ஜெனிவா அமர்வில் பங்கேற்பதற்கான தெரிவுகளில் காணப்படுகின்ற பக்கச்சார்பான நிலைமைகள், தீர்மானிக்கும் பதவிநிலைகளில் தொடர்ச்சியாக குறித்த நபர்களே நீடித்தமை, அந்த நபர்கள் அப்பதவிகளை தமது வாழ்நாள் அடையாளமாக மாற்றுவதற்கு முற்பட்டமை, தனிநபர்களுக்கு வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக புலம்பெயர் தரப்பினரின் பண உதவிகள் கிடைத்தமை, தொடர்ச்சியாக நீடித்த புலம்பெயர் தரப்பினரின் பண உதவிகளை கையாள்வதில் வெளிப்படைத்தன்மையற்ற தன்மைகள் என்று பட்டியல் நீட்டு செல்கின்றன.

இதனால், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் இருந்தவர்கள் தமக்கு கீழ்படியாது முரண்டு பிடித்தவர்களை களையெடுக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்தனர். இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டபோது பல உறவுகள் 'நமக்கேது பொல்லாப்பு' என்று விலகிச் சென்றனர். ஆனால், சில உறவுகள் அதற்கு எதிராக குரல்கொடுப்பதற்கு துணிந்தன. அதன் விளைவுகளை அடுத்த வாரம் பார்ப்போம்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த காரியத்தை மீண்டும் செய்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கடித போக்குவரத்து சாதகமான பலன் தரும். வெளியூர் தகவல்கள் சாதகமானதாக இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் வேகமாக நடைபெறும். தடைகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! தனாதிபதி புதனால் பணவரத்து இருக்கும். எதிர்ப்புகள் விலகும். தடைபட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்திலஇருந்த பிரச்னைகள் நீங்கும்.





மதுனராசி அன்பர்களே! சகோதரர்கள் வகையில் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு மறையும். பூமி தொடர்பான பிரசசனைகள் இழுபறியான நிலை காணப்படும். வழக்குகளில் சுணக்கம் இருக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று மந்தமான நிலை காணப்படும். வரவேண்டிய பணம் கைக்கு கிடைக்க தாமதமாகலாம். போட்டிகளை சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரிடும்.




கடகராசி அன்பர்களே! உடல் ஆரோக்கியம் மேம்படும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். பணவரத்து தடைப் பட்டாலும் வந்து சேரும். வியாபார பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் போது கவனம் தேவை. உத்யோகஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! கோபமான பேச்சு, டென்ஷன் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவார்கள். லாபம் கூடும்.




கன்னிராசி அன்பர்களே! திடீர் கோபம் உண்டானாலும் சமாளித்து விடுவீர்கள். எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களை திட்டமிட்டு செய்வது நல்ல பலன் தரும். வாடிக்கையாளர்கள் பற்றிய வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். புத்தி சாதுர்யத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். பண வரவு திருப்தி தரும். காரியங்களில் இருந்த தடைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காணப்படும். உத்யோகஸ்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்பட செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவார்கள். மேலிடத்தின் கரிசன பார்வை உங்கள் மீது விழும்.








தனுசுராசி அன்பர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வீண் பிரச்னைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். தொழில் வியாபாரம் தொடர்பான மனக் கவலை தோன்றி மறையும். லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிலும் நிதானமாக செயல்படுவதும், மற்றவர்களை அனுசரித்து போவதும் நல்லது.




மகரராசி அன்பர்களே! மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்து பார்த்து செயல் படுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். நண்பர்களால் திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து, அதன் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்ததை விட சற்று நிதானமாகவே நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்ற நிலை காண்பார்கள். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பு காணப்படும்.




மீனராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடச் செய்யும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பேச்சின் இனிமை, புத்தி சாலித்தனம் இவற்றால் முன்னேற்றம் பெறுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பேச்சினால் மேலதிகாரிகளை கவர்ந்து விடுவார்கள். குடும்பத்தில் இருந்த இறுக்கம் நீங்கி மனம் மகிழ்ச்சியடையும் விதமாக சம்பவங்கள் நடக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# அமெரிக்க -சீனா உபாயத்திற்குள் இலங்கைத்தீவின் அரசியல்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) இரு நாட்டுக்குமான அணிகளது இழுபறி நிலவுவதாகவே தெரிகிறது. ஆனால் அதன் ஆழம் அனைத்து தென் இலங்கை ஆட்சியாளர்களும் சீனா பக்கமிருந்து கொண்டு அமெரிக்காவையும் இந்தியாவையும் பயன்படுத்துவதாகவே தெரிகிறது. தென் இலங்கை ஆட்சியாளர்கள் சில சந்தர்ப்பத்தில் சீன -இந்திய பக்கமிருந்து கொண்டு அமெரிக்காவையும், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் சீன-அமெரிக்க பக்கமிருந்து கொண்டு இந்தியாவையும் கையாளுவதைக் கண்டு கொள்ள முடியும். ஆனால் தென் இலங்கை ஒரு போதும் சீனாவை கை விடுவதில்லை என்பதை காணமுடிகிறது.

1952 ஆண்டு முதல் தற்போது வரை இலங்கைக்கும் சீனாவுக்குமான இராஜீக நட்புறவு முரண்பாட்டையே சலசலப்பையோ ஏற்படுத்தவில்லை. மாறாக சீன-இலங்கை உறவை இந்தியா அல்லது அமெரிக்கா குழப்ப முனைந்த போது சில விரிசல்கள் ஏற்பட்டிருக்கலாமே அன்றி வேறு எந்த சந்தர்ப்பத்திலும் இரு நாட்டு நட்புறவும் முரண்பாடடை அடைய வில்லை என்றே தெரிகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் (1982 றப்பம்— அரிசி உடன்படிக்கை) உபாயத்திற்குள்ளால் கட்டமைக்கப்பட்ட இலங்கை-சீன நட்புறவு சிறிமாவோ பண்டாரநாயக்காவாலும் பின்னர் சந்திரிக்கா குமாரதுங்காவாலும் மற்றும் ராஜபக்ஷக்களால் பலப்படுத்தப் பட்டுள்ளது. அதனை ரணில் விக்கிரமசிங்க உறுதியானதாக மாற்றியுள்ளார்.

இங்கு கட்சி அரசியலை விட தேசிய அரசியலே முதன்மையானதாக உள்ளது. உள்நாட்டில் கட்சிகள் மோதிக்கொள்ளலாம். ஆனால் தேசிய நலன் என்று ஏற்பட்டு விட்டால் அதற்கே அனைத்து ஆட்சியாளர்களும் முதன்மை வழங்குவதைக் காணமுடிகிறது. இது அதிகம் புரிந்து கொள்ள குழப்பமான விடயமாகும். ஆனால் அத்தகைய குழப்பமான வடிவத்திற்குள்ளாலேயே தென் இலங்கையின் ஆட்சி மட்டுமல்ல இலங்கைத்தீனின் அரசியலே பயனிக்கிறது. இலங்கைத் தீவின் அமைவிடம் சீன-அமெரிக்காவின் இந்து சமுத்திரப் போட்டியையும் பிராந்திய அரசியல் போட்டியையும் சாதகமாக்கியுள்ளது. இரு பூகோள அரசுகளும் இலங்கைத்தீவின் முக்கியத்துவம் கருதி புவிசார் அரசியல் சக்திகளாக மாறியுள்ளன.

தென் இலங்கை ஆட்சியாளர்கள் எண்ணத்தில் புவிசார் அரசியல் நாடான இந்தியா அந்நியமாகவே உள்ளது. இதனை இந்திய ஆட்சியாளர்கள் கண்டு கொள்ள முன்னர் இரு நாடுகளாலும் இலங்கைத் தீவு காவு கொள்ளப்பட்டு விடும். அதிலும் அமெரிக்காவினது வாய்ப்பினைக் காட்டிலும் சீனாவுக்கே அதிகமான சந்தர்ப்பம் உண்டு. எனவே இலங்கைத்தீவின் அரசியல் தற்போது அமெரிக்க-சீனாவின் களமாகவே மாறியுள்ளது.

அரகளய போராட்டத்திற்கு பின்னர் அமெரிக்காவின் கை ஓங்கினாலும் சீனாவின் சமநிலைப் பங்காளி என்பதில் மாற்றுக் கருத்தின்றி செயல்படுகிறது. அமெரிக்க எதிர்ப்புவாதம் தென் இலங்கை சிங்கள-பௌத்த பெரும்பான்மையின் வாக்குகளை சேகரிப்பதற்கான தற்காலிக உத்தியாகவும் நிரந்தரமாக சீன நட்பினைப் பாதுகாக்கும் நகர்வாகவுமே அமையவுள்ளது. அதனால் அடிபடப் போகும் இன்னோர் சக்தியாக இந்தியா உள்ளது என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அமெரிக்காவை எச்சரிக்கும் போது இந்தியாவையும் இந்தியாவை எச்சரிக்கும் போது அமெரிக்காவையும் கையாளுவதில் தென் இலங்கை வலுவான நிலையிலுள்ளது. இத்தகைய அரசியல் நகர்வு நீடிக்குமா இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லாது கடந்த காலம் முழுவதும் தென் இலங்கை செயல்பட்டுள்ளது. அத்தகைய போக்கினை கண்டு கொள்ளவோ முறியடிக்கவோ அல்லது அவ்வாறு செயல்படவோ ஈழத்தமிழ் அரசியல் தலைமைகளால் முடியாததொன்றாக உள்ளது.

இதில் இந்தியாவுக்கும் பங்குள்ளதென்பது தவிர்க்க முடியாத பதிவாக தெரிகிறது. இலங்கைத் தீவு முழுவதையும் திருப்திப் படுத்த முயன்று றுதியில் வடக்குக் கிழக்கையும் இழக்கும் நிலை இந்தியாவுக்கு ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இத்தகைய கையறு நிலை உண்டு என்பதை இந்திய ஆட்சியாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் ஏற்றுக் கொள்ளவோ கண்டு கொள்ளவோ தயாரில்லை என்பது கடந்த காலம் முழுவதற்குமான அனுபவமாகவே தெரிகிறது.

# வடக்கு கிழக்கில் இந்து முஸ்லிம் ஆலயங்களை...

(3ம் பக்கத் தொடர்ச்சி) 'ஒடுக்குமுறை' கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று இலங்கை அரசாங்கம் மிகவும் மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சம வாயச் சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி மத சிறுபான்மையினரைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பது குறித்து தாம் தொடர்ந்து தீவிர கரிசனை கொண்டிருப்பதாக சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனசாட்சியின் கைதிகள் (இனம், மதம் சார்ந்த குறித்தவொரு தனிநபரின் கருத்துகளை அவர் வாழும் நாட்டினால் பொறுத்துக்கொள்ள முடியாததன் காரணமாக அந்நபர் கைதுசெய்யப்படல்), மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் மத சிறுபான்மையினர் போன்றோர் அரசாங்க அதிகாரிகளின் தொடர் கண்காணிப்புக்களால் அச்சத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். அது மாத்திரமன்றி தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேசங்களிலுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்கத்தலங்களைக் கைப்பற்றுவதற்கு வசதியேற்படுத்தி வருகின்றது' எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழுவின் மற்றுமொரு ஆணையாளரான டேவிட் கெரி இது பற்றி பின்வருமாறு கருத்துரைத்துள்ளார்:

குறிப்பாக தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட மதவழிபாட்டுத்தலங்களை பதிவு செய்வதில் நிலவும் சவால்களுக்கு அரசாங்கம் நிச்சயமாகத் தீர்வை வழங்க வேண்டும். வெளிப்படைத்தன்மை வாய்ந்த பதிவு செயன்முறையை உறுதிப்படுத்தக் கூடியவாறான வழிகாட்டல்களை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம். அத்தோடு மட்டுமீறிய ஒடுக்குமுறைகள், கண்காணிப்புக்கள், வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வு பேச்சுக்கள் போன்றவை பற்றி முறையிடும் மத சிறுபான்மையினரைப் வலுவான பாதுகாப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்' என்று தெரிவித்துள்ளார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun
KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit
தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


SKANDAVARODAYA OSA CANADA
Skanda Old Students' Association
Canada
SKANDA NITE - 2023
TVI புகழ் மதவடி மன்னர்களின்
நகைச்சுவை நாடகம்
Natiya Samarpanaa Kalai Koodam
Rajini Mathivarnan
மாணவர்களின் நடனம் (Fusion)
BOLLYWOOD
DANCE
Saturday
November 04, 2023 @5:30pm
நட்சத்திரா இசைக்குழு
இதய ராகங்கள்
இன்னிசை விருந்து
ரொறன்ரோ பிரபல பாடகர்கள்
NATCHATHRAA MUSIC GROUP
Kennedy Convention Centre
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
More Info: 416-616-8751, 416-402-4495
& 647-454-9617


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.